வாங்க கின்னஸில் இடம் பிடிக்கலாம்







தமிழக அரசு விருது பெற்ற

பாபநாசம் குறள்பித்தன்

வாங்க...

கின்னஸில் இடம் பிடிக்கலாம்...!

தமிழக அரசு விருது பெற்ற

பாபநாசம் குறள்பித்தன்

■

வாங்க... கின்னஸில் இடம் பிடிக்கலாம்..!

■

ஆசிரியர்

பாபநாசம் குறள்பித்தன்

■

முதல் பதிப்பு 2007

■

வெளியீடு:

ஆலயா

எண்.6/11, ராதாகிருஷ்ணன் தெரு,
வ.உ.சி நகர், பம்மல், சென்னை-75

■

விற்பனை உரிமை

எஸ்.ஆர்.சுவாமிநாதன்,

நிவேதிதா புத்தகப் பூங்கா,
எண்.14, இரண்டாம் தளம், பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 14
கைபேசி: 9884714603

■

ஒளி அச்சு:

குகன் கம்ப்யூட்டர்ஸ்

சென்னை-8

■

அட்டை வடிவமைப்பு:

சித்தன் கலைக்கூடம், சென்னை-35,
அலைபேசி:93827 08030

■

அச்சாக்கம்:

பதிப்பக நண்பன், சென்னை - 14

■

பக்கங்கள்

80

■

விலை

ரூ.30/-

■

சாதனைக்கு வயதில்லை...

'முடியும் முன்னேறு...' என்றான் வால்ட் டிக்ளோர் என்கிற ஜெர்மானிய தத்துவஞானி. 'உன்னால் முடியாவிட்டால் வேறு எவராலும் முடியாது' என்று ஓர் ஆங்கிலப் பொன்மொழிகூட உண்டு.

இவை எல்லாம் நமக்குக் கூறும் செய்தி- 'முடியாதது எதுவுமே இல்லை என்பதைத்தானே! பாபநாசம் குறள்பித்தன் 'சாதனை செய்ய வயது ஒரு தடையே கிடையாது. வாருங்கள், உங்கள் உழைப்பைச் சிந்துங்கள்... வாழ்வில் ஒளி பெறுங்கள்' என்று எல்லா வயதினரையும் கூவி அழைக்கிறார்.

'வாங்க கின்னஸில் இடம் பிடிக்கலாம்' என்னும் இந்த நூல் தூங்கிக் கொண்டு இருக்கும் மானுட மந்தைகளுக்கு மத்தியில் நின்று பள்ளியெழுச்சி பாடும் புத்தகப் புதையல். இந்தப் புத்தகத்தைப் பதிப்பிப்பதில் எங்கள் சிந்தையும், கனவும் நிறைவு பெறுகின்றன. ஆம், சமூகத்திற்கான 'விழிப்பு உணர்வு' ஊட்டும் எங்களின் முயற்சியின் முதல் மைல் கல்லாக இந்த நூலைக் கருதி வெளியிடுகிறோம்.

மற்றவர்களால் முடியாத ஒன்றை இன்னொருவர் செய்வது மட்டுமே சாதனையாகி விடாது. அதில் சமூகப் பொறுப்பும், அந்தச் சாதனையின் பாதையில் தேவையின் ஒளியும் படர்ந்திருக்க வேண்டும். அப்போதுதான் அது உண்மையினால் அலங்கரிக்கப்படும் சாதனையாக இருக்க முடியும். அதனைத்தான் பாபநாசம் குறள்பித்தன் இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத் திலும் நடவு செய்திருக்கிறார்.

'ஒரு விளக்கால் இன்னொரு விளக்கை ஏற்றலாம்' என்றார் மேனாள் ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன். இந்தப் புத்தகம் ஒளி விளக்காய், பல இருட்டுப் பக்கங்களைப் பிரகாசிக்கச் செய்யப் போகிறது என்பது சத்திய வார்த்தை!

படியுங்கள் - சாதனை வீரராய் ஒளி வீசுங்கள்!

அன்புடன்,

எஸ்.ராஜேஸ்வரி

நட்புரை

இந்த புத்தகத்தின் தலைப்பே நம்
இதயத்தில் நம்பிக்கையை விதைக்கிறது.
அறுபத்து நான்குமுறை முயற்சித்து
முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்காமல்
தாமஸ் ஆல்வா எடிசனின் அரிய
கண்டுபிடிப்பு தான், மின்விளக்கு.
சுவாசிக்கும் நாசி, எந்த திசையிலிருந்து
வரும் காற்று எனக் கணக்கெடுப்பதில்லை.
அதைப்போல, மனிதர்களில் சிலர்
இலக்கு நோக்கி பயணிக்கிறவர்கள்.
வாழ்நாளில் வெற்றியை
அடைய தவறுவது இல்லை.
சாதனைக்கு உரியவர்களை பட்டியலிட்டு ஒரு
புத்தகமாய் உருவாக்கி இருக்கும்
தமிழக அரசு விருது பெற்ற
எழுத்தாளர் பாபநாசம் குறள்பித்தரின்
தளர்வறியா உழைப்பும், முனைமுறியா முயற்சியும்
தடைகாணா வெள்ளமாய் ஒவ்வொரு
பக்கங்களிலும் முத்துக்குவியலாய்
ஒளிவீசுகிறது.

இர.அன்பரசன்

இவரின் எழுத்துச் சாதனை
வயதோடு சம்பந்தப்பட்டதல்ல, அது
மனதோடு சம்பந்தப்பட்டது.
நம்பிக்கை உள்ளவருக்கு மேற்கிலும்
உதயம் தான் வாழ்வில்.
வேட்கை உள்ளவருக்கு வெற்றி.
உள்ளங்கையில் பதியும் என்பதை
நிருபிக்கும் வகையில், **விரல்** நுனியில்

அநேக விஷயங்களை அடக்கியவராகவும், தலைமுறை தாண்டியும்
சிநேகத்திற்கு சிறப்பு சேர்க்கும் வகையில்
இவரின் 'வாங்க... கின்னஸில் இடம் பிடிக்கலாம்'
புத்தக விரும்பிகளுக்கு ஒரு புதையல் இது.
சாதனையாளர்களுக்கு நல் படையல் இது.
சாதிக்க நினைப்பவர்களுக்கு ஒரு தூண்டுகோல் இது.
என் சிந்தனையை சிறைப்படுத்திய
இவரின் விரல்களையும், எழுதுகோலையும்
சமயம் பார்த்து நான் ரகசியமாய்
களவாட காத்து இருக்கிறேன்.

இந்த புத்தகத்தை வெளியிட்டு
சிறப்பித்த பதிப்பகத்தாருக்கு என்
நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

சூளைமேடு இர.அன்பரசன்

த/பெ.மா.இரங்கநாதன்
எண் 14/17, சௌராஷ்டிரா நகர்
3-வது தெரு சூளைமேடு
சென்னை 94.

மதிப்புரை

மனித வாழ்க்கையில்
படிப்பதே பாதியாகி
போன காலத்தில்,
தேடுதலே வெற்றியின்
வெளிப்பாடு என்ற அடிப்படையில்
உலக சாதனையாளர்களை
ஒரே புத்தகத்தில் அடக்கிய
இவரும் ஒரு சாதனையாளரே!
ஒவ்வொரு பக்கம் நகரும்
போதும் எப்படி முடியும்
என்ற வினாவோடு நம்மையும் ஒரு
சாதனையாளராக மாற்ற
முயற்சிக்கிறார், பாபநாசத்தில்
பிறந்த அறிவுப்பயிர்
திரு குறள்பித்தன் அவர்கள்.
இந்நூல் மனித வாழ்விற்கு
ஒரு மகத்தான அறியப் படைப்பு
என்பது எனது எண்ணம்.
பக்கத்து வீட்டுக்காரனைப் பற்றியே
அறியாத அறிவுடைய நமக்கு
உலக சாதனையாளர்களை
ஒருங்கிணைத்து நம்மிடம்
அறிமுகம் செய்துள்ள
விதம், ஒரு படைப்பாளருக்கு
மட்டுமே பொருந்தும் என்பதை,
விழுதுகள் போல விருதுகள்
பெற்ற எழுத்தாளர்
திரு.பாபநாசம் குறள்பித்தன்
ஒரு சாதனையாளர் என்பதை இந்நூலின்
மூலமாக நமக்கு தெரியவருகிறது.

இரா.கவிராசன்

வாழ்க அவரது தமிழ்த்தொண்டு!
வளர்க அவரது படைப்புகள்
கண்டு...!

கவிஞர் இரா.கவிராசன்

கவிஞன் கலை இலக்கியச் சங்கம்
சென்னை மாவட்ட தலைவர்
எண்.13 வ.உ.சி.தெரு, தேவராஜ் நகர்
சாலிகிராமம், சென்னை - 93.
அலைபேசி: 94443 20891

என்னுரை

பாபநாசம்
குறள்பித்தன்

இதுவன்றோ சாதனை...

ஒரு மாணவன் பள்ளியளவிலே, கல்லூரியளவிலே விளையாட்டில், கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற வேண்டுமென்றால் முயற்சி வேண்டும்.

அதுவே, மாநில அளவிலே; இந்திய அளவிலே முதலிடம் பெற வேண்டுமானால் முயற்சியோடு தளராத உழைப்பும் வேண்டும்.

அதுவே, உலக அளவிலே என்றால், முனைமுறியா முயற்சியும், கடினமான உழைப்பும், உலராத நம்பிக்கையும் மிகமிக கூடுதலாக இருக்க வேண்டும்.

இந்த உந்துதலோடு இருந்தால், உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் எளிதாக இடம் பெற்றுவிடலாம்.

எந்தச் சாதனை செய்யப் போகின்றோம் என்பதைக் குறித்து முதலில் தெளிவான சிந்தனையும், திட்டமிடலும் மிக அவசியமாகும். மேலும், தான் நிகழ்த்தப் போகும் சாதனையால் நாட்டுக்கும், மக்களுக்கும் எந்த வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் போகிறோம் என்பதையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

சாலையே இல்லாத ஊருக்கு ஒருவரே சாலை போட்டார். கல்வி அறிவே இல்லாத பல நூறு பேருக்கு ஒருவரே கல்வி கற்பித்தார்; மழை வளம் பெருக ஊர் முழுதும் ஒருவரே பல ஆயிரம் மரக் கன்றுகளை நட்டு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தினார் என்றால், அது நாட்டு மக்களால் போற்றப்படும் சாதனையாகும்.

அதேநேரம், ஒருவர் முப்பது நிமிடத்தில் முன்னூறு இட்லியைத் தின்றார்; ஒருவர் முப்பது நிமிடத்தில் முன்னூறு முட்டைகளைத் தின்றார் என்றால் அது அறிவான சாதனை யாகுமா...?

இந்நூலைப் போன்று கின்னஸ் குறித்து இதற்கு முன்னர் ஆறு நூல்களை எழுதியுள்ள நிலையில் நான் கூறுகிறேன்...

சாதனைச் செய்கின்றவர்கள், பிறர் பார்த்து அறுவெறுக்கத் தக்க நிலையிலும் - இந்தச் சாதனையால் என்ன பயன்...? என்று பிறர் மனதில் கேள்வி எழாத நிலையிலும் இருத்தல் நன்று.

அதேநேரம் மற்றவர் விழிப்புணர்வு கொள்கின்ற அளவிலே - மக்கள் விரும்பத்தக்க நிலையிலே பயனுள்ள சாதனைகளைத் தேர்வு செய்து ஈடுபடல் வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்நூலிற்கு நல்லதொரு நட்புரையை வழங்கியுள்ள என் இனிய சமூக சேவகரும், கவிஞருமான சூளைமேடு திரு. **இர.அன்பரசன்** அவர்களுக்கும், இனிய நண்பர் **கவிஞர் கவிராசன்** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

எப்போதும்போல் என் எழுத்திற்கும், இதயத்திற்கும் துணை நிற்கின்ற உயிர்த் துணைவியார் **நீலாகண்ணன்** அவர்களுக்கு என் வாழ்த்தும், வணக்கமும்.

எல்லா அலைகளும் படகை உயர்த்தும், என்பதைப்போல், ஒருவரின் நல்ல செயல்பாடுகளும் சாதனைக்கு வழிவகுக்கும்; சரித்திரத்தில் இடம் பிடிக்கும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து... வாருங்கள் கின்னஸில் இடம் பிடிக்கலாம்!

நட்புடன்
குறள்பித்தன்

13/1, 2-வது குறுக்குச் சந்து,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை-24.
அலைபேசி: 94444 54335.

கின்னஸ் புத்தகம் எப்படி உருவானது?

ஒவ்வொரு ஆண்டும் 'கின்னஸ் புக் ஆஃப் வேர்ல்டு ரிக்கார்ட்ஸ்' புத்தகம் வெளியிடப்படுகிறது. விற்பனையும் கோடியைத் தொட்டுவிட்டது.

இந்தப் புத்தகத்தில் ஒருவரின் பெயர் இடம் பெறுவது என்பது சுலபமானது அல்ல. முனைமுறியா முயற்சியும், உலராத உழைப்பும்; தளராத நம்பிக்கையும் வேண்டும்; அறிவு திட்பமும்; நுட்பமும் வேண்டும்.

இன்று கின்னஸ் புத்தகம் அரை நூறு மொழியில் வெளிவருகிறது. இந்தப் புத்தகம் முதன் முதலில் 28.08.1955-இல் வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு வரலாறு, பின்னணி இருக்கும். அப்படி இச்செயலுக்கும் சுவையான கதை போன்ற வரலாறும் உண்டு....

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய மது தயாரிப் பாளர்களான 'ஆர்தர் கின்ஸ்ஸன்' கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக ஹ்யூபீவர் என்று ஒருவர் இருந்தார்.

இவருக்கு வேட்டையாடுவதில் அதிக விருப்பம். அதனால், தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் துப்பாக்கியைத் தோளில் போட்டுக் கொண்டு காட்டை நோக்கிப் போய்விடுவார்.

அப்படி ஒருநாள் வேட்டையாடச் சென்ற வேளையில், ஒரு பறவையைக் குறி பார்த்துச் சுட்டார். வேட்டையாடுவதில் வித்தகரான அவர் குறிக்குத் தப்பி பறந்து போய்விட்டது.

பறவையைச் சுட முடியாது போனதை விட, அது நம் குண்டுக்குத் தப்பியிருக்கிறது என்றால் அந்தப் பறவை எத்தனை மைல் வேகத்தில் பறந்திருக்கும்? என்ற கேள்வியே பீவரின் மனதில் சுற்றிச் சுற்றி வந்துபோனது. இது அவருக்கு சவாலாகவே அமைந்துவிட்டது.

மனச்சோர்வோடு வீட்டுக்கு வந்த அவர் பல நூல்களைப் புரட்டினார். எதிர்பட்டவர்களை எல்லாம் கேட்டுப் பார்த்தார்.

யாரிடம் இருந்தும் தனக்கு வேண்டிய சரியான விடை கிடைக்கவில்லை. எந்த நூல்களிலும் சிறு குறிப்புகள் கூட கிடைக்கவில்லை.

இறுதியில் ஒருவர் சொல்லக் கேட்டு, மாக்விர்டர் சகோதரர்களை தேடிப்பிடித்து அழைத்து வரச் செய்தார். அவர்களும் வந்தனர்.

அவர்கள் இளைஞர்கள். கல்லூரிக் கல்வியை முடித்ததும், 'அதிசயம் ஆனால் உண்மை' போன்ற விவரங்களைத் தொகுத்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்கள் ஒரு செய்தியை ஆய்வதில் தளர்வறியா தன்மை உடையவர்கள். இரட்டையர்கள். நினைவாற்றலும், அறிவாற்றலும் மிக்கவர்கள். அதனால், எது கேட்டாலும் 'டக்டக்' என பதில் சொல்வார்கள். அவர்களுடைய பதில் மிகவும் சரியாகவும் இருக்கும்.

பீவர்.... அவர்களிடம் தான் பறவை வேட்டையாடிய பொழுது நடந்த செயலை அப்படியே கூறினார்.

உடனே அவர்கள் அந்தப் பறவை எதுவென்றும், அதன் வேகம் என்னவென்றும் பளிச்சென்று சொன்னார்கள். அதைக் கேட்டு மகிழ்ந்த பீவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

இவர்களை வைத்துக் கொண்டு, இதுபோன்ற செய்திகளைத் தொகுத்து வெளியிட்டால் என்ன...? என்று. உடனே தொகுத்து வெளியிடத் தொடங்கினார். இப்படி சாதனைகளின் வெளிப்பாடுகளை பல நூறு பக்கங்களை சுமந்துதான் இன்று கின்னஸ் புத்தகம் வெளிவந்து கொண்டிருக்கிறது.

❐

சாதனை படைப்போர் கவனிக்க வேண்டியவை....

கின்னஸ் புத்தகத்தில் நீங்கள் உங்கள் பெயரை இடம்பெறச் செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானால் தொடர்ந்து படியுங்கள்....

உலக அளவில் யாரும் செய்யாத செயலை நீங்கள் செய்ய வேண்டும். வேறு ஒரு நபர் செய்த சாதனையை நீங்கள் மிஞ்சும் வகையிலே முறியடிக்க வேண்டும். இச்சாதனை படைக்க வயது வரம்பு இல்லை. பால் வேறுபாடு இல்லை. செய்யும் சாதனையே அளவு கோலாகும்.

அப்படி நீங்கள் செய்யும் சாதனைகளை தக்க சான்றுகளுடன் நிரூபிக்க வேண்டும். உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் புத்தக நிறுவனத்தின் அனுமதி பெற்ற பிறகே நீங்கள் உங்கள் சாதனையைத் தொடங்க வேண்டும்.

நீங்கள் செய்யும் சாதனை வெளிவந்த பத்திரிகைச் செய்திகள், நிழற்படங்கள், சாதனையின் போது கலந்து கொண்ட முக்கியமான நபர்களின் கையொப்பத்துடன் கூடிய சான்றிதழ் போன்றவைகளை எல்லாம் கின்னஸ் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

நீங்கள் சாதனை படைக்கின்றபோது ஏற்படுகின்ற விபத்துகளுக்கோ, விபரீதங்களுக்கோ, பொருள் இழப்பிற்கோ, உயிர் இழப்பிற்கோ நிறுவனம் பொறுப்பேற்காது. எல்லாவற்றிற்கும் நீங்களே பொறுப்பேற்க வேண்டும்.

சரி... நீங்கள் கின்னஸில் இடம்பெற முடிவெடுத்து விட்டீர்களா...? அப்படி என்றால் இதோ முகவரி....

✸ எடிட்டோரியல் அலுவலகம்,
கின்னஸ் சூப்பர் லேடிவ்ஸ் லிமிடெட்,
33, இலண்டன் ரோடு, என்பீல்டு, மிடில் செக்ஸ்,
இ.எண்: 26. டி.ஜே. இலண்டன் யு.கே.

வாங்க... கின்னஸில் இடம் பிடிக்கலாம்...!

இனிக்கும் இதயம்!

உலகிலேயே மிகப் பெரிய இதய வடிவிலான சாக்லெட்டை பாங்காக்கில் உள்ள கான்ராட் பாங்காக் ஓட்டலில் உருவாக்கப்பட்டுள்ளது.

5 மீட்டர் உயரம், 5 மீட்டர் அகலம் கொண்ட இந்த சாக்லெட்டின் எடை 1100 கிலோ.

8 பேர் சேர்ந்து 21 நாள்களில் இதை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர்.

நீந்தாத கப்பல்!

வல்லவனுக்கு வீணாகும் பொருள் கூட ஆயுத மாகும்...

சாப்பிட்டு விட்டு கீழே வீசி எறியும் ஐஸ்கிரீம் குச்சிகளைக் கொண்டே மிகப் பெரிய கப்பல் ஒன்றை செய்து காண்பித்து உலக சாதனை படைத்துவிட்டார், ஒரு ஸ்டண்ட் நடிகர்.

25 பேர் உதவியுடன் இரண்டு வருடங்களாக இவர் உருவாக்கிய இந்த ஐஸ்கிரீம் குச்சியிலான கப்பலின் நீளம் 15 மீட்டர்.

இந்த அதிசயக் கப்பலை உருவாக்க இவர் பயன்படுத்திய ஐஸ்கிரீம் குச்சிகள் 15 மில்லியன் ஆகும்.

இவரது இந்த அதிசய சாதனை கின்னஸிலும் இடம் பிடித்துள்ளது.

நீண்ட குழல்....

துளைக் கருவிகளில் சிறியதாகவும், அழகான தாகவும், இனிய இசையைக் கொடுக்கக்கூடியதும், புல்லாங்குழல் என்பார்கள்.

இந்தப் புல்லாங்குழலை சீனாவைச் சேர்ந்த ஒரு இசைப்பள்ளி ஆசிரியை இ-சான் என்பவர் உலகின் மிக நீளமான புல்லாங்குழலை செய்து அசத்தியிருக்கிறார்.

இந்த மூங்கில் புல்லாங்குழலின் நீளம் 4.53 மீட்டர். குறுக்களவு 10 சென்டி மீட்டர். ஒரே நேரத்தில் 4 பேர் சேர்ந்துதான் இதை வாசிக்க முடியும்.

இந்தச் சாதனையை உலக சாதனை புத்தகமான கின்னஸில் இடம் பெறச் செய்திருக்கிறார்கள்.

46 வயதில் டாக்டராகி....

அமெரிக்காவைச் சேர்ந்தவர் கிரின்சில். இவர் 16 வயதில் பள்ளிப் படிப்பை விட்டுவிட்டார்.

அதன் பிறகு அவர் திருமணம் செய்து கொண்டு 6 குழந்தைகளுக்கு தாயானார்.

ஒரு காலகட்டத்தில் கணவரை விவாகரத்து செய்துவிட்ட இவர் 10 ஆண்டுகள் படித்து டாக்டர் ஆகியிருக்கிறார்.

இவரது 22 வயது மகள் அமியும் இவருடன் ஒரே நேரத்தில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கின்றார்.

டாக்டர் ஆக வேண்டும் என்பதுதான் என் வாழ்க்கையின் இலட்சியம் என்று கிரீன்சில் சொல்கிறார்.

46 வயதில் ஒரு இடத்தில் வேலை செய்து கொண்டும் குடும்பத்தை கவனித்துக் கொண்டும் படித்து டாக்டர்

ஆகியிருப்பது அசாத்தியமான கின்னஸ் சாதனை என்று அவரது மகள் அமி சொல்கிறார்.

அவர் சொல்வது இருக்கட்டும், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கவ்விப் பிடித்து....

நமக்கெல்லாம் பள்ளி நாளில் 'ரொட்டி கவ்வுதல்' போட்டியில் ஒரு ரொட்டியை முழுதாக கவ்விப் பிடிப்பதற்கே போராடிக் கொண்டிருப்போம்.

ஆனால், ஸ்டீவ் ஸ்பால்டிங் என்ற ஆஸ்திரேலியர் திராட்சைப் பழங்களை கவ்விப் பிடிப்பதில் பலே கில்லாடியாக இருக்கிறார்.

திராட்சைப் பழங்களை கட்டித் தொங்கவிட மாட்டார்கள். 15 அடி தூரத்தில் நின்று கொண்டு ஒருவர் தூக்கி வீசும் பழங்களை வாயினால் கவ்விப் பிடிக்க வேண்டும்.

கவ்விப் பிடிக்கும் திராட்சையை கடித்து தின்னவும் செய்யலாம். துப்பவும் செய்யலாம். அதற்காக விதை இல்லாத திராட்சையை பயன்படுத்துவார்கள்.

இப்படி 30 நிமிடத்தில் ஆயிரத்து 203 திராட்சையை கவ்வியிருக்கிறார், ஸ்டீவ்.

இதற்கு முன் 1189 திராட்சையை கவ்விப் பிடித்தது தான் ஸ்டீவ்வின் தனிப்பட்ட சாதனையாக இருந்தது. கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறுவதற்காகவே இந்த முயற்சி.

கோலாலம்பூரில் பர்மன் என்பவர் ஒரு நிமிடத்தில் 68 திராட்சைகளை கவ்வியதுதான் இதற்கு முந்தைய சாதனை.

இந்த சாதனை 30 வருடங்களாக முறியடிக்கப்படாமல் இருந்தது. அந்த பர்மன் கூட இம்மாதிரி 30 நிமிடங்கள் கவ்வலை தொடரவில்லை.

வளையம் மாட்டியே....

ஆஸ்திரேலியாவின் கரீனா கோட்ஸின் கலக்கல் மிகவும் வித்தியாசமானது.

இந்த இளம் தென்றலின் வாளிப்பான உடலில் ஏகப்பட்ட வளையங்களை மாட்டி சுழலவிட்டு மேடையில் சுத்தி சுத்தி வந்து சுற்றியிருப்பவர்களை சுண்டி இழுத்திருக்கிறார்.

ஹாங்காங்கில் ஒரு ஷாப்பிங் மாலில் கரீனாவின் வளையாட்டம் ஒரே நேரத்தில் 70 வளையங்களை தனது உடலில் மாற்றி மாற்றி மாட்டி சமாளிக்கும் திறமை கரீனாவுக்கு கைவந்த கலையாம்.

இதற்காக கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் கரீனா பெயர் இடம் பெற்றுள்ளது.

கின்னஸில் இடம் பெற்ற மரம்!

கோவை மாவட்டம், வால்பாறை அருகே உள்ளது ஷேக்கல்முடி எஸ்டேட்.

இங்குள்ள வனப்பகுதியில் ஒரு மாபெரும் தேக்கு மரம் உள்ளது. அதன் உயரம் 90 அடி. மரத்தின் சுற்றளவு 7.2 மீட்டர்.

சுற்றளவை வைத்து மரத்தின் வயது கணக்கிடப் படுகிறது. அதன்படி, இதன் வயது 400 ஆண்டு. என அதிகாரிகள் கணக்கிட்டு உள்ளனர்.

கர்நாடக மாநிலத்தில், 1951-ஆம் ஆண்டு 7.6 மீட்டர் சுற்றளவு கொண்ட தேக்கு மரம் இருந்தது.

680 ஆண்டு வயதான அது கின்னஸ் சாதனை பட்டியலில் இடம் பிடித்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன் அந்த மரம் வெட்டப்பட்டுவிட்டது.

எனவே வால்பாறை மலையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இந்த மரம்தான் இந்தியாவிலேயே அதிக வயதுடைய மரம் என்று கருதப்படுகிறது.

சூதாட்டம்....

உலகிலேயே பெரிய விளையாட்டரங்கம், பெரிய திரையரங்கம் என்று அறிந்திருப்பீர்கள். ஆனால், பெரிய சூதாட்ட விடுதியை அறிந்திருக்கிறீர்களா? அப்படி என்றால் இதைப் படியுங்கள்....

சீனாவின் தன்னாட்சி பெற்ற நகரம் மாகா. இங்கு வின், லிஸ்பா பிரம்மாண்டமான கேளிக்கை, சூதாட்ட விடுதி கட்டப்பட்டுவிட்டது.

இதற்கு முன்பு வரை அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் ஸ்டிரிப் என்ற சூதாட்ட விடுதிதான் உலகிலேயே மிகப் பெரியது என்ற சாதனையைப் படைத்திருக்கிறது.

கடந்த (2006) ஆண்டு சூதாட்டத்தில் ரூ.30,800 கோடி குவித்துள்ள இந்த சூதாட்ட விடுதி, அந்தச் சாதனையை முறியடித்து உலகின் மிகப் பெரியது என்ற பெயரைத் தட்டிச் சென்றுள்ளது.

கின்னஸில் இடம் பெற்ற செல்போன்!

நமக்குத் தெரிந்தது எல்லாம், வாங்குவது எல்லாம் சில ஆயிரங்கள் கொண்ட செல்போன்களே.

ஆனால், உலகிலேயே மிக அதிக விலை கொண்ட செல்போனை ஜெனீவாவைச் சேர்ந்த 'கோல்விஷ்' என்ற நிறுவனம் விற்று சாதனை படைத்துள்ளது.

அந்த செல்போனின் விலை 5.85 கோடி ரூபாய். 18 கேரட் தூய வெண் தங்கம். 1800 வைரக்கற்கள் பதித்து அது தயாரிக்கப்பட்டுள்ளது.

பிரான்சின் கேன்ஸ் நகரில் நடந்த விலைமதிப்புள்ள அதை தனது மனைவிக்குப் பரிசாக ரஷ்யாவைச் சேர்ந்த முன்னணி தொழிலதிபர் ஒருவர் வாங்கினார். லீ மில்லியன் என்று பெயரிட்டு மனைவிக்குப் பரிசளித்தார். இதுபற்றி அவர் தெரிவித்ததைத் தொடர்ந்து, உலகின் விலை அதிகமுள்ள செல்போன் என்ற அங்கீகாரத்தை கின்னஸ் உலக சாதனை அமைப்பு அளித்தது.

மொட்டை போட்டே.....

கார்லடேவிட் என்பவரின் சாதனை சிறிது வித்தியாசமானதாகும்.

ஆமாம், தலையை மொட்டை அடிப்பதில் உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் தொடர்ந்து இடம் பிடித்துவருகிறார். மெல்போர்னைச் சேர்ந்த முடி சீர்திருத்தக்காரர்.

'புளுயிடே' என்று ஒரு நிதியமைப்பை ஏற்படுத்தி புற்று நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவி வரும் இவர் நான்கு மணி நேரத்தில் 287 பேர்களுக்கு மொட்டையடித்துக் காண்பித்து இந்தச் சாதனையைச் செய்துள்ளார்.

இதற்கு முந்தைய சாதனையும் இவருடையதே. முந்தைய சாதனையில் 228 பேர்களுக்கு மொட்டை யடித்தார்.

இப்போது தனது சாதனையையே முறியடித் துள்ளார்.

ஆடினார், ஆடினார்....

தர்மபுரியை சேர்ந்த ஸ்ரீதரன் 109 மணி நேரம் பரதம் ஆடி கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் போட முனைந்திருக்கிறார்.

கின்னஸ் புத்தகத்தின் விதிப்படி ஒரு மணி நேரத்திற்கு 5 நிமிடம் ஓய்வெடுக்கலாம்.

ஆனால், அவர் அடிக்கடி ஓய்வெடுக்காமல் தொடர்ச்சியாக ஆடி நேரத்தை சேமித்து வந்தார்.

இவர் கடைசி நேரத்தில் பரதம் ஆடும்போது மிகவும் சோர்ந்து போக, நண்பர்கள் உற்சாகப்படுத்த தன் சாதனையை மிகச் சிறப்பாக முடித்து இருக்கிறார்.

மொத்தம் 109 மணி நேரம் தொடர்ந்து 1498 பாடல்களுக்கு பரதம் ஆடினார். முதல் 105 மணி நேரம் ஆடுவதாக அறிவித்து இருந்தார்.

ஆனால், அதையும் தாண்டி 4 மணி நேரம் கூடுதலாக ஆடி அனைவரின் பாராட்டையும் பெற்றிருக்கிறார்.

இவரது சாதனை காட்சிகள் அனைத்தும் 5 காமிரா மூலம் படம் பிடிக்கப்பட்டது. ஸ்ரீதரன் பரதம் ஆடியதையும், அவர் சாதனையின்போது என்னென்ன செய்தார் என்பதும் படமாக்கப்பட்டது.

கின்னஸில் மிளகாய்!

உலகிலேயே மிகக் காரமான மிளகாய் என்று அசாமில் விளையும் புத் ஜோலோகியா ரக மிளகாயை கின்னஸ் சாதனை அமைப்பு அங்கீகரித்துள்ளது. இதனால், அந்த மிளகாய் விலை கிடுகிடுவென உயர்ந்துவிட்டது.

அசாமை தாயகமாகக் கொண்டு விளையும் மிளகாய் ரகம் புத்ஜோலோகியா. அசாமிய மொழியில் பூதத்தை விரட்டுவது என்று பொருள்.

பூதத்தையே விரட்டிவிடும் அளவுக்கு இதன் காரம் இருப்பதாக பேச்சு வழக்கு என்பதால் இந்த பெயர் வந்தது.

அதை சோதித்துப் பார்த்த விவசாய நிபுணர்களும் உலகின் காரமான மிளகாய் அதுதான் என்றனர். இதனால், கின்னஸில் அதற்கு அங்கீகாரம் தரப்பட்டுவிட்டது.

பெரிய காபி....

ஜப்பானில் மிசுமாமி என்ற இடத்தில் இனாட்சுடவுன் பிளானிங் அசோசியேசன் என்ற நிறுவனம் 1996-இல் மிகப்பெரிய பீங்கான் தட்டைத் தயாரித்து கின்னஸில் இடம் பிடித்துள்ள வேளையில் இங்கே, ஒரு காபி கோப்பையும் அசத்தியுள்ளது....

மெகா காபி கோப்பையில் காபியை கலக்குகின்றனர். பனாமா காபி கம்பெனி ஊழியர்கள்.

2839 லிட்டர் காபியை மிகப் பெரிய கரண்டியின் உதவியோடு இவர்கள் கலக்குகின்றனர்.

இதற்கு முன் 2004-இல் நியூயார்கில் 2498 லிட்டர் காபியைக் கலக்கி கின்னஸ் சாதனை படைக்கப்பட்டது.

தற்போது (2007) இந்த சாதனை முறியடிக்கப் பட்டுள்ளது.

இளம் ஓவியர்!

பிகாசோவும், ரவிவர்மாவும் தொழில் ரீதியான ஓவியர்கள். இவர்கள் இளமையில் பெரும் அளவில் புகழ் பெறவில்லை. ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பின் தான் இவர்களின் புகழ் உலகளவில் ஒளி பெற்றது.

ஆனால், இங்கே ஒரு இளசு மிகக் குறைந்த வயதிலேயே உலக அளவில் கின்னஸில் இடம் பெற்று விட்டது.

நாலரை வயதேயாகும் அருஷி பட்நாகர்தான் தொழில் ரீதியிலான உலகின் இளம் ஓவியன்.

கின்னஸ் சாதனை அமைப்பு இதற்காக அவனுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்தூரைச் சேர்ந்த இவனது ஓவியங்கள் தனியாக கண்காட்சியாகவே வைக்கப்பட்டு உள்ளன.

சொடக்குப் போட்டே....

சென்னை பெரம்பூரைச் சேர்ந்தவர் இளைஞர் கணேசன் பட்டதாரி. இவர் பிறந்த மூன்று வயதிலேயே இரண்டு கால்களும் போலியோ நோயால் பாதிக்கப் பட்டன.

தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டதில், வலது கால் மட்டும் குணமடைந்தது. இடது கால் குணமடைய வில்லை. காலில் தான் ஊனம்; உள்ளத்தில் வாழ்வைப் பற்றிய நம்பிக்கை குறையவில்லை.

இந்த கால்களுடன் சைக்கிளில் சென்று படித்தார்; பி.காம்.பட்டம் பெற்றார். படிப்பை முடித்த பிறகு முழு மூச்சாக ஜிம்னாஸ்டிக் பயிற்சியில் இறங்கினார்.

ஒரு கையை நிலத்தில் ஊன்றி உடல் முழுவதையும் மேலே கொண்டு வரும் தீவிர பயிற்சியை செய்து கின்னஸ் சாதனைக்குத் தயாராகிவிட்டார்.

சென்னையில் உள்ள ஓய்.எம்.சி.ஏ.மைதானத்தில், பொதுமக்கள் முன்னிலையில் தொடர்ந்து ஒரு நிமிடம் 66 விநாடிகள் சொடக்குப் போடுதல் மற்றும் ஒரு நிமிடம் 45 விநாடிகள் கையை நிலத்தில் (ஸ்டூலில்) ஊன்றி உடல் முழுவதையும் மேலே எழுப்பி சாதனை புரிந்தார்.

இவ்விரு சாதனைகளும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறவுள்ளன.

சொடக்குப் போடுதலில் முந்தைய உலக சாதனையாக இருந்தது 165. அதை இவர் 166 போட்டு முறியடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில் உடல் ஊனமுற்ற ஒரு வாலிபர் மனஉறுதியுடன் பயிற்சி மேற்கொண்டு கின்னஸ் சாதனை செய்தது இதுவே முதல்முறை.

யானையைத் தூக்கியவர்!

இது நடத்திருப்பது தாய்லாந்தில். அவரது பெயர் சின்மாய் என்பது. வயது 75. இவர் 356 கிலோ எடையைத் தாங்கி சாதனை படைத்துள்ளார்.

தாய்லாந்தின் வடக்குப் பகுதியில் உள்ளது மாய் வாங் என்ற கிராமம். இங்குதான் சின்மாய் என்ற பலசாலி இளைஞர் - தாத்தா இந்த சாதனையை புரிந்துள்ளார்.

அங்கு ஒரு பெரிய பலகை மீது 318 கிலோ எடையுள்ள குட்டி யானை ஏற்றப்பட்டது. பலகை, இரும்பு கம்பிகளுடன் சேர்த்து மொத்த எடை 356 கிலோ. இதை சிறிதும் அசராமல் தன் தோள்களில் தாங்கிப் பிடித்தார், சின்மாய். இதைப் பார்த்தவர்கள் மிகவும் பயந்து போனார்கள்.

உடலை கட்டுக்கோப்போடு வைத்துக் கொள்வதில் இளமையிலிருந்தே சின்மாய்க்கு பயங்கர ஆர்வம் இருந்ததால்தான், இந்த உலக சாதனையை இவர் செய்ய முடிந்ததாம்.

பல் துலக்கி....

வாண்டுகளின் கின்னஸ் சாதனைகள் பெருகத் தொடங்கி இருப்பது குறித்து மகிழ்ச்சியடையலாம்.

பாம்பை விழுங்குகிறேன், பல்லியைத் தின்கிறேன் என்பது போல் இல்லாமல், பயனுள்ள விழிப்புணர்வோடு கூடிய செயலாகவும் இருக்கிறது.

பிலிப்பைன்சில் பள்ளி மாணவர்கள் புதுமையான உலக சாதனையை நிகழ்த்தி உள்ளனர்.

அங்கு ஒரே நேரத்தில் 41 ஆயிரத்து 38 மாணவர்கள் பல் துலக்கி உள்ளனர்.

இதுவரை பிரிட்டனில் ஒரே நேரத்தில் 33 ஆயிரத்து 38 மாணவர்கள் பல் துலக்கியதுதான் சாதனையாக கின்னஸில் இருந்தது. இப்போது பிலிப்பைன்ஸ் மாணவர்கள் அதை தூக்கி சாப்பிட்டுள்ளனர்.

மணிலா நகரில் மட்டும் 14,340 மாணவர்களும், செபுவில் 13,209 மாணவர்களும் டாவே நகரில் 13.489 மாணவர்களும் ஒரே நேரத்தில் பல் துலக்கியுள்ளனர்.

பனியில் படுத்து....

சிலர் கால் தடத்தையும், சிலர் கைத் தடத்தையும் பதித்து சாதனை படைத்து உள்ள நிலையில், இங்கே தங்கள் உருவத்தையே பதிவு செய்துள்ள நிகழ்வே இது....

ஜெர்மனியின் பிஸ்மார்க் பகுதியில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தரையை மூடிக்கிடக்கிறது பனி.

இதில் ஒரே நேரத்தில் அதிகம் பேர் படுத்து கை, கால்களை நீச்சல் அடிப்பது போல் அடித்து, பனியில் தங்கள் உருவத்தைப் பதிவு செய்வதில் சாதனை பதித்துள்ளனர்.

இதற்கு முன் 3,784 பேர் இப்படி பனியில் தங்கள் முத்திரையைப் பதித்தது உலக சாதனையாக உள்ளது.

அதை முறியடிக்கும் வகையில் பனியில் படுக்கும் நிகழ்ச்சி நடந்துள்ளது. இதில் 9 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்றதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகம் பால் கறந்து....

பொதுவாக நல்ல ஆரோக்கியமுள்ள, உயர்ரக பசு மாடு ஒரு நாளைக்கு 30 முதல் 40 லிட்டர் வரை பால் கொடுக்கும்.

இதற்கும் மேலும் ஒரு பசு 70 லிட்டர் பால் கொடுத்து கின்னஸில் இடம் பிடித்திருந்தது.

இந்தச் சாதனையை இப்போது ஒரு பசு முறியடித்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் ஒரு பசு ஒரே நாளில் 111.2 லிட்டர் பால் கறந்தது. உலக சாதனையைப் புரிந்தது.

அந்தப் பசு கேப்டவுன் அருகிலுள்ள ஸ்டெல்லின் போச் என்ற இடத்தை சேர்ந்த லுட்விஸ்வான் என்பவருக்குச் சொந்தமானது.

இந்த அபூர்வ பசுவைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ஸ்டெல்லின் போச் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானியும் இரண்டு மாணவர்களும் வந்தனர்.

அவர்கள் அந்தப் பசுவின் தோலில் இருந்து 'சாம்பிள்' வெட்டி எடுத்துச் சென்றனர்.

இந்த சம்பவம் நடந்த சில மணி நேரத்தில் அந்தப் பசு மயங்கி விழுந்தது.

அதைத் தொடர்ந்து கால்நடை மருத்துவர்கள் அந்தப் பசுவிற்கு தீவிரமாக சிகிச்சை அளித்தனர்.

ஆனால், எந்த சிகிச்சையும் பலன் தரவில்லை. அது இறந்து போனது.

அது சாவதற்கு முந்தைய நாள் கூட 94 லிட்டர் பால் கறந்திருக்கிறது.

இதுபற்றி பசுவின் உரிமையாளர் லுட்விஸ்வான் கூறுகையில், ''எனது பசு இலட்சத்தில் ஒன்று. அதை ஸ்டெல்லின் போச் பல்கலைக் கழகத்தினர், ஆராய்ச்சி என்ற பெயரில் அநியாயமாகக் கொன்றுவிட்டனர்'' என்று புலம்புகிறார்.

உயர்ந்த பாலம்!

உலகின் மிக மிக உயரமான பாலம் என்ற பெருமைக்குரியது 'மில்லாவ் பாலம்.

பிரான்சில், மாசிப் மத்திய மலைத் தொடரில் தர்ன் என்ற ஆற்றின் மீது இது கட்டப்பட்டுள்ளது.

பிரிட்டன் கட்டடக் கலை நிபுணர் நார்மன் பாஸ்டர், இதை வடிவமைத்தார். பாலத்தின் உயரம் 890 அடி. நீளம் 2.46 கிலோ மீடடர்.

ஈபிள் கோபுரத்தைவிட இந்த பாலம் 70 அடி உயரம் கொண்டது.

உலகின் மிக உயரமான பாலம் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம் பெற்றுவிட்டது.

மனித முகம்

குமரி மாவட்டம், குழித்துறை அருகே உள்ள மீனச்சலைச் சேர்ந்த ஓவியர் ராஜசேகரன், கின்னஸ் சாதனைக்காக, 36 அடி உயரமும் 80 அடி நீளமும் கொண்ட பலகையில் மிகப் பெரிய மனித முகத்தை மட்டும் 8 நாள்களில் வரைந்துள்ளார்.

இதற்கு முன், வியட்நாமில் 50 அடி உயரமும் 100 அடி நீளமும் கொண்ட பலகையில், 1,200 பேர் சேர்ந்து இதுபோன்ற ஓவியத்தை வரைந்து சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றனர்.

ஆனால், ராஜசேகரன் தனி ஒருவராக இருந்து இச்சாதனையைச் செய்து கின்னஸையும் நோக்கிப் போய்விட்டது.

ஆடலும் பாடலும்!

ஐரோப்பிய நாடுகளில் டேப்-டான்ஸிங் எனப்படும் ஒருவகை நடனம்; மிகவும் பிரபலம் பெற்றது.

மேடையில் நடனமாடும் கலைஞர் தன்னுடைய ஆட்டத்துடன், ஷூ காலால் இதமான இசையையும், உருவாக்கி ஒரு சேர வெளிப்படுத்துகிற மாதிரியான நூதன நடனம் இது.

டேப்-டான்சிங் ஆட்டத்தில் கின்னஸ் சாதனை படைத்தவர். கிரிஸ்மான் ஜேம்ஸ் டெவின்.

இளம் நீச்சல் வீரர்

அமெரிக்காவைச் சேர்ந்தவன் பிராக்ஸ்டன் பில்ப்ரே. இவன் அரிசோனா மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

ஏழு வயதேயான இவன் அல்காட்ராஸ் தீவிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோவிற்கு நீந்திச் சென்ற இளம் வயது நீச்சல் வீரன்.

47 நிமிடத்தில் 2.25 கிலோ மீட்டர் தூரத்தை கடந்துள்ளதே சாதனையாகும்.

சுரேகா....

ஆந்திர மாநிலத்தை சேர்ந்த சுரேகா, 5 வயதில் கிருஷ்ணா நதியைக் கடந்து, லிம்கா சாதனை புத்தகத்தில் (2001) இடம் பிடித்த இவர் -

தமிழகத்தின் தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலை மன்னார் வரை வங்கக் கடலில் 40 கிலோ மீட்டர் தூரம் நீந்தி சாதனை படைக்க 10-ஆவது சுரேகா பயிற்சி எடுத்துவரும் இவர், 2004-ஆம் ஆண்டு மத்திய அரசு விருதும், ஆந்திர மாநில அரசின் 'பிரதிபா புரஸ் கார்' விருதையும் பெற்றுள்ளார்.

மகளிர் தினத்தில்.... மாணவி!

சென்னை முகப்பேர் வேலம்மாள் மேல் நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவி, அப்சரா.

இவர் இந்த ஆண்டு (2007) உலக மகளிர் தின விழா கொண்டாட்டத்தின்போது, வாயில் கயிறு கட்டி மூன்று வேன்களை இழுத்தார்.

எல்லாம் எதற்காக? லிம்கா சாதனைப் புத்தகத்திலும், கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெறத்தான்.

சாதனை படைத்த மாநகராட்சி!

சென்னை மாநகராட்சியின் சார்பில் 155 வார்டு களிலும் ஒரே நாளில் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள், தேசிய சாதனையாக இடம் பெற்றுள்ளது.

அது குறித்து சென்னை மேயர், மா.சுப்பிரமணியன் பேசியது.

முதன் முறையாக நான் மேயராக தேர்ந்து எடுக்கப் பட்டபோது, கடும் மழைக்காலமாக இருந்தது.

உடனடியாக உள்ளாட்சித் துறை அமைச்சர் ஸ்டாலினுடன் ஆலோசனை நடத்தினோம்.

அந்த ஆலோசனையின்போது, ஒரே நாளில் 155 வார்டுகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் போன்ற தன்னார்வ அமைப்புகளின் உதவியோடு 155 வட்டங்களிலும் மருத்துவ முகாம்களை நடத்தினோம்.

அதில் 61 ஆயிரம் மக்கள் பயன் பெற்றனர். ஒரே நாளில் 155 முகாம்கள் நடத்தியது தேசிய சாதனையாக 'லிம்கா' புத்தகத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அதற்கான சான்றிதழ் அனுப்பி உள்ளது.

உலகமே... ஓவியமே....

உலக ஓவியர்களின் பார்வையை தமிழகத்தின் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்கப் போகிறது.

ஆமாம், அந்த ஓவியத்தை திருச்சி ஆர்ட் கேலரி உரிமையாளர் கிரிராஜ் தலைமையில் 10 பெண்கள் 15 ஆண்கள் இணைந்து 26 நாட்களில் உருவாக்கியுள்ளனர்.

சுமார் ஒன்றரை டன் எடை, 30 அடி நீளம், 8 அடி அகலம், 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவு. 12 விதமான நிறங்கள், 26 விதமான வேலைப்பாடுகள்.....

இவை அனைத்தும் இணைந்ததுதான் உலக சாதனைக்காக உருவாக்கப்பட்ட திருமால் பெருமை என்ற இந்த தஞ்சாவூர் ஓவியம்.

பரம்பரை பரம்பரையாக தஞ்சாவூர் ஓவியங்கள் வரைந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த கிரிராஜும், அவரது மாணவர்களும் இணைந்து உருவாக்கியது இந்த ஓவியம்.

முதல் நாள் வாட்டர் புரூப் பிளைவுட்டில் 112 அகலம் உள்ள புது வெள்ளைத் துணியை ஒட்டி வேலையை ஆரம்பித்தனர்.

புளியங்கொட்டை, பசை, சாக்பவுடர், மதராசிஸ் மருந்து... இவை அனைத்தையும் கலந்து துணிமேல் பிரஷ் செய்தனர். பின் அதனை காயவைத்து அதன் மீது படத்துக்கு அவுட் லைன் வரைந்தனர்.

அதன் மீது கற்கள் வைக்க வேண்டிய இடத்தில் ஜெய்ப்பூர் கற்களை ஒட்டினர்.

அதன் பின்னர் மீண்டும் சாக் பவுடர். புளியங் கொட்டை, களி மருந்து இவை அனைத்தையும் தடவி அதன் மீது சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்ட ரேக்கை ஒட்டியுள்ளனர்.

இறுதியாக 12 விதமான நிறங்களைக் கொண்டு இவற்றை இணைத்து, பெயிண்ட் செய்யப்பட்டு

தயாரானது. உலக சாதனைக்கான திருமால் பெருமை ஓவியம்.

தேவலோகத்தில் பெருமாள் ஆதிசேஷன் மடியில் அமர்ந்திருக்க, ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் பெருமாள் கால்களை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெருமாளின் நாபிக்கமலத்தில் இருந்து பிரம்மா தாமரைப் பூவில் வெளிவர, சரஸ்வதி, நாரதர் தும்புரு ஆகியோர் மேலிருந்து வணங்குகின்றனர்.

பெருமாளின் கீழ் ஆஞ்சனேயர், கருடாழ்வார் இருவரும் மண்டியிட்டுள்ளனர். இடதுபுறம் சிவன் பார்வதி, விநாயகர், முருகன் என்று குடும்பத்துடன் அருள் வழங்க, அருகில் இந்திராணியுடன் தேவலோக அதிபதி இந்திரன், வலதுபுறம் சூரியன், சந்திரன், பிரகஸ்பதி, பிரகலாதன், துருவன் மற்றும் சிவலிங்கத்திற்கு பாலை வார்த்து அபிஷேகம் செய்து கொண்டிருக்கும் காமதேனு தன் கன்றுடன் உள்ளனர். அனைவரும் வணங்கும் முகமாக நின்றிருக்க சிவபெருமானும், பெருமாளும் மட்டும் அருள் பாலிக்கின்றனர்.

இந்த சாதனையாளர் சொல்கிறார்... 'இது இறைவன் எனக்கு அருளிய பாக்யம்... உலக சாதனை என்பதோடு மட்டுமல்லாமல் இறைவனை முன்னிருத்தி ஒரு சாதனை என்று கருதுகிறேன்.

பரம்பரை பரம்பரையாக எங்கள் முன்னோர்கள் செய்த தொழில், சாதாரணமாக ஒரு சிறிய படம் வரைய வேண்டும் என்றாலும், அதற்கு 26 நாட்கள் தேவைப் படும்.

ஏனென்றால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேலைப்பாடுகளை செய்ய வேண்டும்.

எங்களுடைய 26 நாள் வேலைகளையும் சி.டி.யாக தயார் செய்து கின்னஸ் நிறுவனத்துக்கு அனுப்பி யுள்ளோம். இன்னும் நான்கு மாதத்தில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுவிடும் என்கிறார் இந்த சாதனையாளர், கிரிராஜ்.

இந்த ஓவியம் 100 வருடங்களையும் தாண்டி அப்படியே மங்காமல் இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

உயர... உயர...

சிலர் சாதனை படைக்கப் போகிறேன் என்று சொல்லி சமாதியாகியே போய்விடுகிறார்கள். அப்படி ஒரு சோதனைதான் இது...

ஈரானில் டெஹ்ரான் நகரில் இஸ்லாமிய புரட்சியின் 28-வது ஆண்டையொட்டி சுதந்திர டவரின் மீது ஏறி சாதனைப் படைக்கப் போவதாக அறிவித்தார், அமீர் மௌசாவி(32)

50 மீட்டர் உயரம் கொண்ட இந்த டவர் 1971-இல் கட்டப்பட்டது. டெஹ்ரானின் மேற்கு பகுதி நுழை வாயிலாக இது உள்ளது.

ஊரே சுற்றி நின்று வேடிக்கைப் பார்க்க டவரில் மெல்ல மெல்ல ஏறிய அமீர், ஒரு கட்டத்தில் மிகவும் சோர்ந்து போனார். இருந்தாலும் தம் பிடித்து தொடர்ந்து மேலே ஏறினார்.

உச்சியைத் தொட 3 மீட்டர்தான் பாக்கி என்ற நிலையில் அந்த விபத்து நடந்துவிட்டது. களைப்பின் உச்சத்தில் ஒரு அடி கூட நகர முடியாத நிலையில், கூடியிருந்த அனைவரும் பயத்தில் அலற, கைப்பிடி நழுவி 47 மீட்டர் உயரத்தில் இருந்து கீழே விழுந்த அமீர் அடுத்த நொடியில் இறந்து போனார்....

விரல்களிடையே...

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் டி.சி.ராஜன் என்பவர், தனது கைவிரல்கள் இரண்டை மட்டுமே பயன்படுத்தி அனைத்துவித இசைக் கருவிகளின் ஒலியையும், எழுப்பி கின்னஸ் சாதனை செய்துள்ளார்.

மாணவர் சாதனை!

அமெரிக்காவின் ப்ரூட்வாலி பள்ளி மாணவர்கள் மொத்தம் 1,066 டெலிபோன் டைரக்டரிகளை வரிசையாக நேராக நிறுத்தினார்கள்.

ஒரே ஒரு டைரக்ட்ரியை லேசாகத் தட்டிவிட்டால் போதும், ஒன்றன் பின் ஒன்றாக அத்தனையும் சரிந்துவிழும்.

இது ஒரு உலக சாதனை என்பது குறிப்பிடத்தக்கது. இது நிச்சயம் அர்த்தமுள்ள சாதனைதான்.

காரணம், வீணாகப் போகும் டெலிபோன் டைரக்ட்ரிகளை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்திதான் இந்த சாதனையை மாணவர்கள் செய்தனர்.

அரிசி மூட்டையை....

தேனி மாவட்டம் உத்தம பாளையம் அங்காளம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் மாரியப்பன் (26).

தமிழ்நாடு சிறப்பு காவல் படை 6-ஆம் அணியில் 2-ஆம் நிலை காவலராக உள்ளார்.

இவர், சென்னை பிரஸ் கிளப்பில் 40 கிலோ அரிசி மூட்டையை பல்லால் கடித்து 23 சென்டி மீட்டர் உயரத்துக்கு தூக்கி 60 விநாடிகள் நின்றார்.

இந்த சாதனை குறித்து மாரியப்பன் கூறுகையில்; ‘‘கின்னஸ் சாதனைப் படைக்க வேண்டும் என்று ஆசை. 2004-இல் அலியாஸ் முனியப்பன் ராஜா என்பவர் 32 கிலோ எடையை 42 விநாடிகள் பல்லால் தூக்கி சாதனை படைத்தார்.

இதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் முறியடித்தேன். அப்போது 35 கிலோ அரிசி மூட்டையை பல்லால் கடித்து 60 விநாடிகள் தூக்கி ‘லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தேன்.

மாநில போலீஸ் போட்டியில், மீண்டும் அதைச் செய்து காண்பித்து முதல்வர் மு.கருணாநிதியிடம் ரூ.5 ஆயிரம் பரிசு பெற்றேன்.

இப்போது 40 கிலோ தூக்கியுள்ளேன். இன்னும் 3 மாதத்தில் கின்னஸ் அதிகாரிகள் முன்பு மீண்டும் சாதனை படைக்க எண்ணியுள்ளேன்’ என்கிறார், இந்த சாதனை காவலர்.

நாக்காலேயே... ஓவியம்!

புதுவையை சேர்ந்த ஆர்.இராஜேந்திரன் நாக்கில் தூரிகையைப் பிடித்து முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் படத்தை வரைந்துள்ளார்.

அதுவும் 127 மணி நேரம் இரவு பகலாக தொடர்ந்து வரைந்துள்ளார். இந்தச் சாதனையை வி.ஜி.பி.கோல்டன் பீச்சில் செய்துள்ளார்.

இது இப்போது 2007-ஆம் ஆண்டின் லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. 10 அடி உயரம் 7 அடி அகலம் கொண்டது இந்த படம்.

இதைத் தொடர்ந்து கின்னஸ் சாதனைத் தொடுவேன் என்கிறார் இந்த சாதனையாளர்.

ஸ்டிராக்களை....

திருச்சி - ஜீவா நகரைச் சேர்ந்தவர் வினோத் (16) தில்லை நகரிலுள்ள கி.ஆ.பெ.விஸ்வநாதம் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படிக்கிறார்.

இவர், வாயில் 400 ஸ்டிராக்களை வைத்தபடி, ஒரு மணி நேரம் சைக்கிள் ஓட்டி லிம்கா சாதனை செய்துள்ளார்.

மாட்டு இறைச்சியில்...

மலேசியாவில் சைபர் ஜயாவில் உள்ள மல்டிமீடியா பல்கலைக் கழகத்தில் கலாச்சார விழா நடைபெற்றது.

அப்போது மலேசிய மாணவர்கள், அவ்விழாவில் 1.8 கிலோ மீட்டர் தூரத்துக்கு மிக நீண்ட கபாப் (மாட்டு இறைச்சி) வரிசையாக சமைத்து, உலகிலேயே மிக நீளமானது இதுதான் என்ற நிலையில் கின்னஸில் இடம் பெறவே இவர்களது முயற்சி.

சக்கரத்தைக் காலில் கட்டி....

உலகை மிதிவண்டியிலும், காரிலும், விமானத்திலும், நடந்தும் சுற்றி வந்திருப்பதை நாம் அறிவோம். இதையும் படியுங்கள்....

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர், டேவிட்கார்ன்த் வெய்ட். இவர் ஸ்கேட் போர்டு எனப்படும் சக்கரத்தை ஒரு காலில் பொருத்திக் கொண்டு ஆஸ்திரேலியாவைச் சுற்றி வருகிறார்.

27 வயதாகும் இவர் கடந்த (2006) ஆண்டு பெர்த் நகரில் இருந்து இந்தப் பயணத்தைத் தொடங்கினார். 5 ஆயிரத்து 793 கிலோ மீட்டர் தொலைவுக்கு அவர் ஒரு கோடியில் இருந்து இன்னொரு கோடிக்கு இந்தப் பயணத்தை நடத்தி வருகிறார்.

ஏற்கெனவே, ஜான் ஓ கிரோட்ஸ் என்ற இடத்தில் இருந்து பூமியின் கடைக் கோடிக்கு ஸ்கேட்டிங் மூலம் பயணம் செய்தார். ஆயிரத்து 441 கிலோ மீட்டர் தூரத்தை ஒரு மாதத்தில் அடைந்தார்.

அதைத் தொடர்ந்துதான் பெர்த்தில் இருந்து இந்தப் பயணத்தைத் .தொடங்கினார். பிரிஸ்பேனில் தன் பயணத்தை முடிக்கும் இந்த சாதனையாளர், பயணத்தில் 13 பூட்சுகளை பயன்படுத்தினாராம்.

நீரிலும் நிலத்திலும் ஓடும் கார்!

சிலருக்கு ஏதாவது சாதனைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே இருக்கும். சிலருக்கு சந்தர்ப்பச் சூழ்நிலை அதை உருவாக்கி வைக்கும்.

அப்படித்தான் இங்கே ஒரு சாதனையாளர் உருவாகி இருக்கிறார்.

திருவனந்தபுரம் மீரமன்கரையைச் சேர்ந்தவர் வினோத் (35). இவர், ஆட்டோ மொபைல் ஒர்க் ஷாப் நடத்தி வருகிறார்.

இவர் ஒரு நாள் மழையில் காரில் சென்றபோது சாலையில் தேங்கியிருந்த நீரால் தொடர்ந்து செல்ல முடியவில்லை.

இதையடுத்து தண்ணீரில் ஓடக்கூடிய காரை கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது.

தனது விடாமுயற்சியால் சாதாரண கார் ஒன்றை அவர் தண்ணீரில் செல்லும் வகையில் மாற்றி அமைத்தார்.

தன் கண்டுபிடிப்பான காரை (2007) கரமனை என்ற இடத்தில் ஆற்றில் ஒரு மணி நேரம் ஓட்டி சோதனை செய்தார், வினோத்.

பின்னர் அதே காரை சாலையிலும் ஓட்டி மகிழ்ந்தார்.

இதேபோல், தன்னுடைய மாற்றியமைக்கப்பட்ட காரை கடலிலும் ஓட்டி சாதனைப் படைக்க அவர் முடிவு செய்தார்.

அதன்படியே விழிஞ்ஞும் கடலில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் கார் ஓட்டி தனது சாதனையை அவர் நிகழ்த்தினார்.

தன் சாதனை குறித்து வினோத் சொல்வது... 'என்னுடைய முயற்சிக்கு கேரள அரசு ஆதரவு தராதது வருத்தத்தைத் தருகிறது. விரைவில் கோவளத்திலிருந்து கடல் வழியாக காரில் கன்னியாகுமரி சென்று மீண்டும் அதே காரில் கன்னியாகுமரியில் இருந்து கோவளம் வரை சாலை வழியாக வர உள்ளேன்.

இந்தச் சாதனையாளர் கடலில் கார் ஓட்டியதால் தற்போது அரபு நாட்டில் உள்ள ஜெர்மன் மோட்டார் படகு நிறுவனத்தில் வேலை இவருக்குக் கிடைத்திருக்கிறது.

பின் பக்கமாகவே....

அமெரிக்காவின் மேப்லாண்ட் நகரில் நடத்தப்பட்ட சாதனை இது.

சார்லஸ் கிரைக்டன், ஜேம்ஸ் ஹார்கிஸ் என்ற இருவர் நியார்க் நகரிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் வரையிலுள்ள 5375 கிலோ மீட்டர் தூரத்தை போர்டு மாடல் காரை பின் பக்கமாகவே ஓட்டிச் சென்றனர்.

இடையில் ஒரு முறைகூட அவர்கள் எஞ்சினை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கின்னஸ்... ஆப்பிள்!

மிகப் பெரிய பறங்கிக்காய், பூசணிக்காய், கத்தரிக்காய் என்று பல காய்கள் கின்னஸில் இடம் பெற்றுள்ளன.

இங்கே... ஆப்பிள் ஒன்றும் இடம்பிடித்து உள்ளது. ஆமாம், இங்கிலாந்தில் ரோசான் ஓயே என்ற இடத்தைச் சேர்ந்த ஒருவரது ஆப்பிள் தோட்டத்தில் விளைந்திருந்த ஆப்பிள்களில் ஒன்று ஒரு கிலோ 360 கிராம் எடை கொண்டதாக இருந்தது.

நகம் வளர்த்து.....

நகம் வளர்ப்பதில், ஸ்ரீதர் மால்காஜி சிலால் என்பவர் பத்து வயது முதல் தற்போது வரை 20 அடி வளர்த்து சாதனை படைத்தார். இவர் மராட்டிய மாநிலம் பூனேயைச் சேர்ந்தவர். இவரைப் போலவே டில்லியைச் சேர்ந்த ஒருவர் நகம் வளர்ப்பில் சாதனை செய்து உள்ளார்.

அவர் பெயர், ரமேஷ்சர்மா. இவர் வளர்த்துள்ள நகத்தின் நீளம் 3.5 மீட்டர்.

ஆண்கள் மட்டும்தான் இப்படி நகம் வளர்த்து கின்னஸில் இடம் பெற முடியுமா...? பெண்களாலும் முடியும் என்பதுபோல் இந்தச் சாதனையில் இறங்கி யுள்ளார்.

இந்த 'விரல் பெண்மணி' - அமெரிக்காவில் சால்ட் லேக் சிட்டி என்ற ஊரில் வாழும் இப்பெண்மணியின் பெயர், லீரெட்மாண்ட்.

லீ, ஏதாவது சாதனை புரிய வேண்டும் என்று நினைத்த இந்தப் பெண்மணிக்கு தோன்றியது கைவிரல்களில் நகம் வளர்ப்பதுதான்.

கடந்த 27 ஆண்டுகளுக்கு முன்பு இதற்கான சபதத்தை மேற்கொண்டு, உயிரை வளர்ப்பதுபோல் நகத்தையும் வளர்க்கத் தொடங்கினார்.

இப்போது, எந்த ஒரு பெண்ணும் மூன்றடி நீள அளவிற்கு நகம் வளர்க்கவில்லை என்ற காரணத்தால், இவரது நகம் மூலம் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இவர் பெயர் இடம் பெற்றுள்ளது.

இவர் விரல் நகங்களை வெட்டினால் 56 இலட்சம் ரூபாய் பரிசு தருவதாக அமெரிக்க பத்திரிகை ஒன்று விலை பேசியது. அதற்கு மறுத்துவிட்டார், இந்த சாதனைப் பெண்.

இது குறித்து அவர் கூறுவது இதுதான்.... ‘‘நகங்கள் வளரும்போது வளைவாகவே வளரும். அப்படி வளர்ந்தபோது ஆரம்ப நிலையில் அதை வெட்டினேன். ஆனால், அது வளைவாகத்தான் வளரும் என்பதை அறிந்து வெட்டுவதை விட்டுவிட்டேன்.

நகங்கள் வேகமாக வளர புரோட்டின் சத்து அவசியம் தேவை. அதனால் என் உணவில் அதிக அளவு புரோட்டின் சத்துள்ள உணவு வகைகளை சேர்த்துக் கொள்வேன்.

என்னைக் காண்பவர்கள் எல்லாரும் எப்படி இவ்வளவு நீண்ட நகங்களை வைத்துக் கொண்டு வாழ முடிகிறது என்று கேட்பதோடு, குளியல்... மற்ற செயல்களை எல்லாம் எப்படி செய்து முடிப்பீர்கள்...? என்றும் கேட்கிறார்கள்.

‘மிகவும் கவனமாக... என்பதுதான் அவர்களுக்கு என் ஒரே பதில்...’ என்று கூறியுள்ளார், லீரெட்மாண்ட்.

பெண்கள், முடிவளர்த்தால் அழகு. நகம் வளர்த்தால், அழுக்கல்லவா...?

நூல் கோர்த்து....

இந்தியாவில் சஞ்சய்குமார் மாலிக், இவர் 2 மணி நேரத்தில் 11,796 தடவை ஊசியில் நூல் கோர்த்து சாதனை செய்துள்ளார்.

தலையில் பாட்டில்.....

ஜமைக்காவைச் சேர்ந்த ஆஸ்ரிதா பர்மன் என்பவர் தலையில் பாட்டில்களை வைத்தபடி 15 மணி 2 நிமிடம் நடந்து 89 கிலோ மீட்டர் தூரம் கடந்து சாதனை படைத்தார்.

உட்கார்ந்து...

பூபிந்தர்சிங் நெகி. ஒரு மணி நேரத்தில் 319 முறை உட்கார்ந்து எழுந்து சாதனை செய்தார்.

சைக்கிள் ஓட்டி

அமெரிக்காவின் லாஸ்வேகாசைச் சேர்ந்த பீட்டர் ரோஷிண்டல் ஒரு சைக்கிளை 38 மீட்டர் ஓட்டியுள்ளார். சைக்கிள் உயரம் 6.35 சென்டி மீட்டர் உலகில் மிகச்சிறிய சைக்கிள் இது.

கார் பந்திய வீரர்

ஜெர்மனியின் மைக்கேல் சூமேக்கர் பார்முலா கார் பந்தயங்களில் கடந்த 1990 முதல் 2001 வரை 162 போட்டிகளில் பங்கேற்று 801 புள்ளிகள் எடுத்துள்ளார். இது ஒரு உலக சாதனையாகும்.

தொடர்ந்தார்போல் 7 முறை சாம்பியன்ஷிப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தரத்தில் 37....

அந்தரத்தில் கம்பியில் - கையில் இரும்புக் கழியுடன் சீனாவைச் சேர்ந்த ஒருவர் நடக்கிறார்....

இதைத்தான் நம்மூர்க்காரர்கள், தெருமுனைகளில் செய்து கொண்டிருக்கிறார்களே... என்று நினைக்கிறீர்களா...?.

அதுபோல்தான் என்றாலும், இதில் ஒரு மாற்றம் செய்து இவர் சாதனை ஏற்படுத்தி இருக்கிறார்.

அதாவது, கம்பியில் இதுபோல் 37 நாட்கள் நடந்து உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

சிவஸ்ரீ செய்த....

மதுரையை அடுத்துள்ள வில்லாபுரத்தைச் சேர்ந்தவர் எல்.கே.மூர்த்தி. இவரது மகள் எல்.எஸ்.சிவஸ்ரீ.

இவர் குறைந்த நேரத்தில் அதிக தூரம் விரைவாக ஓடி, கின்னஸ் சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த ஆண்டு (25.02.2007) 29.4 கிலோ மீட்டர் தூரத்தை 169. நிமிடங்களில் ஓடி, சாதனை நிகழ்த்தியுள்ளார்.

ஐந்தரை வயதில் கின்னஸ் சாதனை படைக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன், பயிற்சியில் ஈடுபட்டுள்ள சிறுமி சிவஸ்ரீ குறித்த தகவல் முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் கவனத்துக்கு வந்தது.

இதையடுத்து அந்த சிறுமியை பெற்றோருடன் சென்னைக்கு வரவழைத்த முதல்வர். அந்த சிறுமியை பாராட்டியதோடு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து ஒரு இலட்சம் நிதி உதவியும் வழங்கினார்.

பந்தயப் புறா!

1996-இல் பின்லாந்தில் பறக்க விடப்பட்ட,புறா ஒன்று 26,000 கிலோ மீட்டர் பறந்து ஆஸ்திரேலியாவை வந்தடைந்து கின்னஸில் இடம் பிடித்துள்ளது.

இங்கே நடந்துள்ள ஒரு புறாவின் சாதனை இது....

ஆந்திரா - இராமநாதபுரம் இடையேயான 660 கிலோ மீட்டர் தூரத்தை 8 மணி நேரத்தில் கடந்து பந்தய புறா சாதனை படைத்துள்ளது.

இராமநாதபுரத்திலுள்ள சென்ட்ரல் இராமநாதபுரம் ரேசிங் ஹோமர் கிளப் சார்பில் புறா பந்தயம் நடத்தப் பட்டது.

ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டத்தில் உள்ள தடா என்ற இடத்தில் இருந்து கடந்த ஆண்டு (2007) புறாக்கள் பறக்க விடப்பட்டன. இதில் 24 புறாக்கள் பங்கேற்றன.

இதில் சுரேஷ் என்பவரின் புறாவான மோசஸ் 660 கிலோ மீட்டர் தூரத்தை 8 மணி 2 நிமிடம் 5 விநாடியில் கடந்து இராமநாதபுரம் வந்து சேர்ந்து முதல் இடத்தைப் பிடித்தது.

மிளகாய் தின்று....

இட்லி சாப்பிட்டு, முட்டை சாப்பிட்டு பழம் சாப்பிட்டு எல்லாம் கின்னஸ் சாதனை படைத்திருக்கும்போது, இங்கே ஒரு பெண்மணி 'அதிகார'மாகவே ஈடுபட்டு கின்னஸில் இடம்பிடித்து இருக்கிறார்.

அசாமின் - கவுகாத்தி நகரைச் சேர்ந்த 26 வயது பெண்மணியின் பெயர் அனந்திதா தமுலி.

திருமணமாகி குழந்தைக்குத் தாயான இவருக்கு, இளம் வயதிலிருந்தே சிகப்பு மிளகாயை நறநறவென கடித்துத் தின்பதில் சாதனை செய்யும் வெறி இருந்ததாம்.

இவரது காரமான ஆசையைப் புரிந்து கொண்ட கின்னஸ் சாதனை அமைப்பினர் சாதனை நிகழ்ச்சியில் பங்கேற்க இலண்டன் வருமாறு அழைத்துள்ளனர்.

இந்தக் காரமான பெண்மணி கின்னஸில் இடம் பெறப் போகிறார்.

மீன் உணவு!

சீனப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடந்த மீன் உணவு சாதனை இது....

மலேசிய சுற்றுலா விளம்பரத்துக்காக நடந்த இதில் 'யீ சாங்' என்ற பெயரில் 500 மீட்டர் (அரை கிலோ மீட்டர்) நீளத்துக்கு மீன் கலந்த சாலட் செய்யப்பட்டது.

நூடுல்ஸ், காய்கறிகள், சூப் கலந்த உணவில் மெல்லிய மீன் துண்டுகள் சாலட்டில் சேர்க்கப்பட்டன.

சீனப் புத்தாண்டின்போது 'யீ சாங்' உணவை 'லோ ஹீ' என்ற கோஷத்துடன் சாப்பிட்டால் ஆண்டு முழுவதும் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்பது மக்கள் நம்பிக்கை.

அதனால், 500 மீட்டர் நீள சாலட்டை 500 நிமிடத்திற்குள் புகுந்து விளையாடி சாதனை படைத்துள்ளனர்.

இரயிலை மிஞ்சிய சைக்கிள்!

பலருக்கு ஐம்பது வயதைத் தொட்டுவிட்டாலே வயசாயிடுச்சு. முடியலே என்று கவலைப்பட்டு பெருமூச்சு விடத் தொடங்கிவிடுகிறார்கள்.

மனதில் உற்சாகமும், எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் என்றும் இளமை யாகவே செயல்படுவார்கள். சாதனை படைப்பார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இங்கே ஒருவர் இருக்கிறார்.

புனேவைச் சேர்ந்தவர் வினோத் புனமியா. வயது 50. கவரிங் நகை வியாபாரி.

இவர் இந்த (2007) ஆண்டு புனே புறநகர் பகுதியில் உள்ள பாலேவாடி கிரிதா நாகரியில் இருந்து 140 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள டோம்பிவ்லிக்கு சைக்கிளை ஓட்டி வந்தார்.

இதில் என்ன வியப்பு என்பவர்களுக்கு... இவர்தான் புறப்பட்ட இடத்திலிருந்து டோம்பிவ்லிக்கு வர எடுத்துக் கொண்ட நேரம்... 2 மணி 10 நிமிடங்கள் மட்டுமே.

இந்த இரு நகரங்களுக்கு இடையே இயங்கும் 'டெக்கான் குயின்' அதிவிரைவு இரயில் கூட இந்த தூரத்திற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் 2 மணி 32 நிமிடங்கள்.

'டெக்கான் குயினை' காட்டிலும் 22 நிமிடங்கள் முன்னதாக வந்து சாதனை படைத்த வினோத்தை காவல் துறை உயர் அதிகாரிகளும், பொதுமக்களும் பாராட்டி மகிழ்ந்தனர்.

தனது சாதனை குறித்து வினோத் சொல்கிறார்....

''கடந்த 1980-ஆம் ஆண்டு மும்பை புனே இடையிலான சைக்கிள் போட்டியைப் பார்த்தேன்.

அப்போதுதான் சைக்கிளை வேகமாக ஓட்டி சாதனை படைக்க வேண்டும் என்று உறுதி எடுத்தேன்.

என்னுடைய இந்த சாதனையை இதற்கு முன்பே சோதித்துப் பார்த்தேன்.

அப்போது, அதிவிரைவு இரயிலை விட இரண்டு நிமிடங்கள் தாமதமாக வந்தேன்.

இரயிலைவிட வேகமாக வர வேண்டும் என்ற எண்ணத்தில் கடுமையாக பயிற்சி எடுத்தேன். இப்போது சாதனையும் படைத்துள்ளேன்'' என்று.

விரைவில் கின்னஸில் இடம் பிடிப்பதே இவர் இலக்காம்.

காரிலேயே....

வாகன விபத்தில் சிக்கி உயிர் பிழைத்தவர்களில் மிகச் சிறியவர் என்ற சாதனையை ஒரு குழந்தை படைத்துள்ளது.

இக்குழந்தையின் தாய் காரில் பயணம் செய்து கொண்டு இருந்தபோது, காரிலேயே பிரசவம் நடந்தது.

பிரசவம் நடந்து முடிந்த சிறிது நேரத்தில் விபத்து நேர்ந்தது. ஆனால் தாயும், மகனும் உயிர் பிழைத்துக் கொண்டார்கள். கின்னஸ் புத்தகத்தில் இடமும் பிடித்தார்கள்.

கின்னஸ் நாய்!

சிறு படகு ஓட்டுதல். மிதக்கும் பலகைகளில் அமர்ந்து அலைகளிடையே விளையாடும் விளையாட்டு. மலை மற்றும் பாறை ஏறுதல் போன்றவற்றில் உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது பார்ட்-எக்ஸ் என்ற நாய்.

ஜான்பால் ஏடாக் என்பவருக்குச் சொந்தமான இந்த நாய்தான் உலகிலேயே அதிக அளவில் பங்கு பெற்று சாதனையும் சாகசமும் செய்த நாய் என்ற பெருமையைத் தட்டிச் சென்று உள்ளது.

இடம் பிடித்த இரட்டையர்....

இரட்டையர்களின் சந்திப்பு ஒன்று தைவானில் (1999) நடந்தது. அதில் 3961 ஜோடி இரட்டையர்கள் கலந்து கொண்டார்கள்.

இது கின்னசில் இடம் பெற்ற உலக சாதனையாகும். தைபேயில் உள்ள நகர அரங்கில் நடைபெற்ற இந்த சந்திப்புக்கு நகர மேயர் ஏற்பாடு செய்து இருந்தார்.

இதேபோன்று (1998) அமெரிக்காவைச் சேர்ந்த ஒகியோ நகரில் நடைபெற்ற இரட்டையர்களின் சந்திப்பில் 2900 ஜோடி கலந்து கொண்டனர்.

இந்த கின்னஸ் சாதனை இப்போது முறியடிக்கப் பட்டது.

அதிகம் வளரும்....

ஹெஸ்பரோயிக்கா லிப்லெய் என்ற தாவர இனத்தைச் சேர்ந்த இந்த மரம்தான் உலகிலேயே மிக வேகமாக வளரக்கூடிய மரம்.

சிசிலித் தீவுகளில் உள்ள டிரெஸ்கோ அபெ என்ற இடத்தில், இந்த மரத்தின் வளர்ச்சி கண்டுபிடிக்கப்பட்டு கின்னஸ் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

அதாவது இந்த மரம் நாள் ஒன்றுக்கு 3 அடி வீதம் வளர்கிறதாம்.

628 கிலோ பறங்கிக்காய்!

அமெரிக்காவின் ஆரிகன் மாநிலத்தில் உள்ள ஸ்டீவ் டால்டியாஸ் என்ற விவசாயி பயிரிட்ட பறங்கிக்காய்தான் இதுவரை கின்னஸ் ரிகார்ட் பிரேக் பண்ணியிருக்கு.

அதோட எடை 628 கிலோ. இது நன்கு வளர்ந்த கரடியோட எடையை விட அதிகமாம்.

டிரம்ஸ்....

மேகாலயா தலைநகர் ஷில்லாங்கில் ஒரே இடத்தில் அதிக அளவில் 'டிரம்' (தோல் இசைக்கருவி) கலைஞர்கள் வாசிக்கும் மிகப்பிரமாண்டமான சாதனை முயற்சி நடந்தது.

மேகாலயா சுற்றுலா வளர்ச்சி அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதில் 7 ஆயிரத்து 951 டிரம் கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை, ஹாங்காங்கில் 2005-ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரே இடத்தில் 7 ஆயிரத்து 725 டிரம் கலைஞர்கள் வாசித்ததுதான் முந்தைய உலக சாதனையாக இருந்தது.

அதை (2006) இப்போது முறியடித்து உள்ளனர்.

நீச்சலில்....

மிக இளம் வயதில், ஒரே ஆண்டில் ஆறு கடல்களை நீந்திக் கடந்தமைக்காக குற்றாலீசுவரன் கின்னஸில் இடம் பிடித்தார். 5,600 மீட்டர் தூரத்தை ஏழு வயதில் 3 மணி 5

நிமிடத்தில் நீந்தி அருண் பாலாஜி கின்னஸில் இடம் பிடித்தார். பிரான்ஸ் நாட்டில் பிறந்த 'பெனாயிட் லிகமெட்' என்பவர், அட்லாண்டிக் கடலில் 3,400 மைல்கள் நீந்தி சாதனை படைத்தார்; நாலரை வயது சிறுமி ட்ரூணா நிஷாத் 6,050 மீட்டர் தூரத்தை 6 மணி 39 நிமிடத்தில் நீந்தி சாதனை படைத்தார்; 1997-இல் ஆங்கிலக் கால்வாயை ஆசியாவிலேயே முதலில் நீந்திக் கடந்த கொல்கத்தாவைச் சேர்ந்த முகமது மசதூர் ரகுமான் போன்றோர். இப்படி நீச்சலில் கின்னஸில் இடம் பிடித்திருக்கிறார்கள்.

இவர்களை எல்லாம் ஓரம் ஒதுக்குவதுபோல் ஒருவர் செய்துள்ள நீச்சல் சாதனையைப் பாருங்கள்...

மார்ட்டின் ஸ்ட்ரெல், என்பது அவரது பெயர், இவரை நீச்சல் மன்னன் என்றே அழைக்கலாம்.

காரணம், அமேசான் நதியை நீந்திக் கடந்த முதல் நீச்சல் வீரர் இவர்தான்.

பெரு நாட்டிலுள்ள அடல்யா பகுதியிலிருந்து பிரேசில் நாட்டிலுள்ள பெலேம் பகுதி வரை 5,265 கிலோ மீட்டர் தூரத்துக்கு அமேசான் நதியைக் கடந்துள்ளார், மார்ட்டின்.

இதற்கு அவருக்கு தேவைப்பட்டது வெறும் 66 நாள்கள் மட்டுமே. இந்த ஆண்டு (2007) சாதனை படைத்தார்.

இதற்கு முன்பு தனுபே (3.004 கிலோ மீட்டர்) மிசிசிபி (3.797 கிலோ மீட்டர்) யாங்ட்சே (4,003 கிலோ மீட்டர்) ஆறுகளையும் நீந்தி கடந்து உள்ளார்; இந்த நீச்சல் வீரர்.

கண்ணான மருத்துவர்!

உலகிலேயே அதிகமான அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் யார்...? இந்த சாதனையைச் செய்தவர் ஓர் இந்தியர்தான்.

அவர் பெயர் முருகப்ப சென்ன வீரப்பமோடி. இவர் இதுவரை 595 இலட்சம் கண் அறுவை சிகிச்சைகளை செய்து உள்ளார்.

இவர் கடந்த 1943-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 100900 நோயாளிகளுக்கு மேல் சோதனை செய்துள்ளாராம்.

இவர் கடந்த 1968-ஆம் ஆண்டு திருப்பதியில் ஒரு சாதனை செய்தார். 14 மணி நேரத்தில் 833 கண் அறுவை சிகிச்சைகளை செய்ததுதான் அது.

கிராமப்புறங்களிலுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை யளிக்க வேண்டி, நடமாடும் கண் மருத்துவமனையையும் உருவாக்கியுள்ளார்.

இப்படி உலக சாதனை புரிந்த டாக்டர் மோடியை 'கண்ணு கொடுத்த அண்ணா' என்று அன்புடன் அழைக்கிறார்கள் - ஆந்திர சகோதரர்கள்.

கண் பார்வை கொடுத்த சகோதரன் என்பது அதன் பொருள். இதையெல்லாம் விட பெரிய சாதனை ஒன்றுண்டு. தன்னுடைய பணிக்காக ஃபீஸ் வாங்குவ தில்லை இந்த டாக்டர்.

ஓடினார்....

உலகில் அதிக வேகத்தில் ஓடும் மனிதர் டிம்மான்ட் கோமெரி என்ற அமெரிக்க வீரர்தான்.

இவர் 14.09.02 அன்று 100 மீட்டர் தூரத்தை 9.78 விநாடிகளில் கடந்தார். பாரீஸ் நகரில் இந்தத் தடகள வீரர் ஓடிய வேகத்தின் அளவு எவ்வளவு தெரியுமா? மணிக்கு 36.8 கிலோ மீட்டர் வேகத்திற்கு சமமானது.

இவருக்குப் பிறகு யாரும் தடகளத்தில் இவ்வளவு வேகமாக இன்னும் ஓடிவரவில்லை.

முறியடிக்க....

பனிச்சறுக்கு விளையாட்டின் ஒரு பிரிவான ஸ்கை ஜம்ப்பில் 669 அடி தூரம் வரை தாவி உலக சாதனை புரிந்தவர்; ஆன்டிரஸ் கோல்ட்பெர்ஜர் என்ற ஆஸ்திரியா வீரர்; செக் குடியரசில் உள்ள ஹார்ச் செவி என்ற இடத்தில் இந்தச் சாதனையை 96-இல் இவர் நிகழ்த்தினார்.

இந்த வகையான நான்கு உலகக் கோப்பை போட்டிகள் முடிந்தும் இந்தச் சாதனையை எவராலும் முறியடிக்க முடியவில்லை.

காரில் சுற்றி....

கொல்கத்தாவைச் சேர்ந்த சலாகுதீன் அவர் மனைவி நீனாசௌத்திரி இருவரும் கார் மூலம் உலகை 1989-ஆம் வருடம் செப்டம்பர் 9 முதல் நவம்பர் 17 வரை 40.750 கிலோ மீட்டர் சுற்றி 69 நாள் 19 மணி ஐந்து நிமிடத்தில் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

நடந்தே....

டேவிட் குன்ஸ்ட் என்பவர் 1970 முதல் 1974 வரை நான்கு வருடத்தில் 23,250 கிலோ மீட்டர் தூரம் நடந்தே உலகைச் சுற்றி வந்து உலகச் சாதனை படைத்துள்ளார்.

ஒரே காலில்....

இவர் இலங்கையைச் சேர்ந்தவர். அருள் ஆனந்தம் சுரேஷ் என்பது அவரது பெயர்.

இவர் ஒரே காலில் 76 மணி 40 நிமிடம் நின்று, கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் நின்றுவிட்டார்.

விமானத்தை

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் ஹக்ஸ்லே என்பவர் 1997 அக்டோபர் 15-இல் சிட்னி விமான நிலையத்தில் 187 டன் எடை கொண்ட விமானத்தை 91 மீட்டர் தூரம் கயிறு கட்டி இழுத்துள்ளார்.

இந்த உலகச் சாதனையை ஒரு நிமிடம் 277 விநாடிகளில் செய்து முடித்தார்.

விமானத்தில்....

பிரிட்டனைச் சேர்ந்த ஸ்டீவ்போசட் என்பவர் 80 மணி நேரத்தில் நிற்காமல் உலகை விமானத்தில் சுற்றி வந்து சாதனை புரிந்திருக்கிறார்.

அமெரிக்காவின் 'சாலினா கனேஸ்' விமான நிலையத்தில் துவங்கி மோன்ட்ரியல், இலண்டன், பாரீஸ், ரோம், கெய்ரோ, பஹ்ரைன், கராச்சி, கொல்கத்தா, ஷாங்காய், டோக்கியோ என அனைத்து நாடுகளையும் தொட்டு 36,787 கிலோ மீட்டர் சுற்றி மீண்டும் அமெரிக்காவுக்கே திரும்பியிருக்கிறார்.

படுத்துக் கொண்டே ஓட்டும்படி அமைந்து உள்ள இந்த விமானத்தின் நீளம் 14 மீட்டர் எடை 10 டன்.

இதற்கான ஏற்பாடுகளை விர்ஜின் கடை அதிபர் 'ரிச்சர்ட்டிரான்சன்' செய்திருக்கிறார்.

உயர்ந்த மனிதர்!

உகாண்டா நாட்டிலேயே மிகவும் உயரமான மனிதர், ஜோன் ஓபிவோனா என்ற மனிதர்தான்.

இவரின் உயரம் 8 அடி இரண்டு அங்குலம் ஆகும்.

உகாண்டாவின் தெற்குப் பகுதியிலுள்ள யோகோலோ என்ற கிராமத்தில் இந்த உயர்ந்த மனிதர் வாழ்ந்து வருகிறார்.

கிராமவாசி என்பதால் இவரது அளவிற்கு ஆடைகள், செறுப்புகள் கிடைப்பது இல்லையாம். சாதாரண மனிதர்கள் பயன்படுத்தும் ஆடைகள் இவருக்கு அரைகுறையாக இருக்கின்றனவாம்.

இர்வின் சாதனை!

அமெரிக்காவில் நியூயார்க்கை சேர்ந்த இர்வின் கார்ட்டன் என்பவர் தனது 'வோல்வோ' கார் மூலம் 1966-லிருந்து 2004 வரை 35,72,342 கிலோ மீட்டர் பயணம் செய்து சாதனை படைத்துள்ளார்.

ட்ராஃபிக்ஜாம்!

1990 ஏப்ரல் 12-ஆம் தேதி பாரிஸ் நகரத்தில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலில் சுமார் 176 கிலோ மீட்டர் நீண்டு இருந்தது. இதுவே உலகின் நீண்ட தூர 'ட்ராஃபிக் ஜாம்' ஆகும். இதுவும் ஒரு சாதனையே - வேதனையே!

குரானில்....

லக்னோவைச் சேர்ந்த 'ஹசிம் அக்தர் நாக்வி' குரானில் ஒரு பகுதியை 5,000 விதமான எழுத்துக்களில் எழுதி லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்து விட்டார்.

இவைகளில் 786-யை சமீபத்தில் பொதுமக்கள் பார்வைக்கும் வைத்தார்.

'நாய்க்குடை'

ஸ்விட்சர்லாந்தில் 800 மீட்டர் நீளமும் 500 மீட்டர் அகலமும் கொண்ட பிரம்மாண்டமான நாய்க்குடை (காளான்) வளர்ந்து சாதனைப் படைத்தது.

கம்பியில் நடந்து.....

வடஅமெரிக்காவில் அந்தரத்தில் கட்டப்பட்ட கம்பி மீது நீண்ட தூரம் நடந்தவர் என்ற சிறப்பைப் பெற்றவர் இவர்தான்.

ஜே.கோச்ரேன் என்ற இவர் இதற்காக கனடாப் பகுதியில் உள்ள நயாகரா அருவி அருகே உள்ள பகுதியில் அதிக உயரத்தில் நடந்து காட்டினார்.

அதிக உயரத்தில் கட்டப்பட்ட கம்பியின் மீது நடப்பதில் இதையும் சேர்த்து ஏழு உலக சாதனைகளையும் செய்திருக்கிறார்.

பலசாலி மனிதர்

காரை இழுத்தார்கள், இரயிலை இழுத்தார்கள். இங்கே ஒருவர், கின்னஸ் சாதனைக்காக என்ன இழுத்தார் என்பதைப் பாருங்கள்....

பல்வேறு வாகனங்களை இழுத்து தன்னுடைய பலத்தை வெளிக்காட்டி வருகிறார் அமெரிக்கர் ஒருவர்.

இந்த உலக மகா பலசாலியின் பெயர் ஜான் உட்டன்.

இவர் 'உலகின் பலசாலி மனிதன்' என தன்னைப் பற்றி கூறிவருகிறார். இதற்கு சாட்சியாக அமெரிக்காவில் ஓபா லாக்காவில் 18 சக்கர லாரியை கயிற்றால் கட்டி இழுத்தார்.

30 விநாடிகளில் 30 அடி தூரத்துக்கு கயிற்றால் இழுத்துச் சென்று சாதனை படைத்துள்ளார்.

கிறிஸ்துமஸ் நெருங்குவதால், கிறிஸ்துமஸ் தாத்தா போல வேஷம் போட்டுக் கொண்டு இந்தச் சாதனையைச் செய்துள்ளார், ஜான்.

இவருக்கு சாதனைகள் ஒன்றும் புதிதல்ல. விமானத்தில் இருந்து கப்பல் வரை பலவற்றையும் இழுத்து தன் பலத்தை பறைசாற்றியுள்ளாராம்.

இம்மாதிரி உலக சாதனைகளை நூற்றுக்கும் அதிகமான முறை செய்திருக்கிறார், என்பது கூடுதலான செய்தியாகும்.

பாடி... பாடியே

மத்தியப் பிரதேச மாநிலம் காண்ட்வா நகரைச் சேர்ந்தவர் சானியா சயீத்(18).

உலக சாதனை படைக்க வேண்டும் என்பது இவரது நீண்ட கால கனவு.

அதற்காக இவர் தேர்ந்தெடுத்தது தொடர்ந்து பாடுவது... பாடிக் கொண்டே இருப்பது....

காண்ட்வா நகரில் கடந்த (15.12.2006) இரவு சாதனை முயற்சியை தொடங்கினார், சானியா.

சாதனை முயற்சியின் கடைசி கட்டத்தில் பல சோதனைகள்.

சானியாவின் வாய் புண்ணானது, கொப்புளங்கள் தோன்றின. குரல் வளை வீங்கியது. தாங்க முடியாத வேதனை.

ஆனால், மன உறுதியுடன் தொடர்ந்து 131 மணி நேரம் பாடி அசத்திவிட்டார், சானியா.

தன் சாதனை முயற்சியை சானியா நிறைவு செய்தபோது அரங்கத்தில் இருந்தவர்கள் பாராட்டி மகிழ்ந்தனர்.

இதுகுறித்து சானிய கூறுகையில்.... ''இந்தச் சாதனைக்கு என் பெற்றோரும், காண்ட்வா மக்களும்தான் காரணம்.

அவர்கள் தந்த ஊக்கத்தால் சாதனை படைக்க முடிந்தது.

பிரபல இந்திப் பாடகர் கிருஷார் குமாரின் சொந்த ஊரான காண்ட்வாவில் சாதனை புரிந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றார்.

இதற்கு முன்பு கோவையைச் சேர்ந்த தேவேந்திர குப்தா, 101 மணி நேரம் தொடர்ந்து பாடி சாதனை புரிந்தார்.

அதை ஜபுவாவைச் சேர்ந்த முகேஷ் 105 மணி நேரம் தொடர்ந்து பாடி முறியடித்தார்.

இப்போது, 131 மணி நேரம் தொடர்ந்து பாடி புதிய சாதனை படைத்துள்ளார், சானியா.

இந்தச் சாதனையை அங்கீகரிக்கக் கோரி கின்னஸ் நிறுவனத்துக்கு விண்ணப்பித்துள்ளதாக சானியாவின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

நடை பயணத்தில்....

வாஜ்யான் என்பது அவள் பெயர். வயதோ 15. நாடோ சீனம். இவள் விளையாட்டு வீராங்கனை.

5,000 மீட்டர் நடைப்பந்தயத்தில் 21 நிமிடம் 34 விநாடிகளில் முதலாவதாக வந்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தாள்.

இந்த சாதனையை எந்த ஒரு 15 வயது வீராங்கனை களும் இதுவரை முறியடிக்கவில்லை.

ஒரு விநாடியில்....

கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற தடகளப் போட்டியில் ஜமைக்காவின் அஸபா போவல் 9.77 விநாடிகளில் 100 மீட்டர் தூரத்தைக் கடந்தார்.

இதன் மூலம் ஒரு விநாடியில் 100-இல் ஒரு பங்கு விரைவாக வந்து, 2002-இல் அமெரிக்க வீரர் டிம்மாண்ட் காமரி படைத்த 7.78 என்ற சாதனையை முறியடித்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

விரைவில் வீடு!

நியூசிலாந்தின் தென் ஆக்லாந்து பகுதியில் நூறு கொத்தனார்கள், பெயிண்டர்கள் ஒன்று சேர்ந்து ஒரு வீட்டை மூன்று மணி 44 நிமிடம் 59 விநாடியில் கட்டி முடித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

இதன் மூலம் அமெரிக்கர்களின் 4 மணி 9 நிமிடம் 15 விநாடியில் வீடு கட்டி முடித்த சாதனை முறியடிக்கப் பட்டுள்ளது.

எட்டிப் பிடித்த எவரெஸ்ட்....

எவரெஸ்ட் சிகரத்தை எத்தனையோ பேர்கள் ஏறி சாதனை படைத்திருக்கிறார்கள்.

தனித்தும், குழுக்கலாகவும் ஏறி சாதனை படைத்திருப்பதோடு, செயற்கைக் கால் பொருத்திய ஒருவர் கூட இச்சிகரத்தைத் தொட்டு சாதனை படைத்திருக்கிறார்.

இங்கே ஒருவர் தொட்ட சாதனை இது.... தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர், கெத்தே ஓடவுட் என்ற பெண்.

மலையேறும் வீராங்கனையான இவர் எவரெஸ்ட், சிகரத்தை எட்டிப் பிடித்ததில் ஓர் உலக சாதனையையே படைத்துள்ளார்.

எவரெஸ்ட் சிகரத்தின் வடக்கு, தெற்கு ஆகிய இரு திசைகளிலும் இவர் மலையேறி உள்ளார்.

இந்தச் சாதனையை செய்த முதல் பெண் இவரே ஆவார்.

குள்ள மனிதர்....

முன்பு இந்தியாவில் கல்முகமது என்பவர், 50 சென்டி மீட்டர் உயரமே கொண்டவராக இருந்தார்.

இவர் தற்போது இறந்து போகவே 65 சென்டி மீட்டர் உயரமே கொண்ட எட்வான் என்ற ஜோர்டான்காரர் உலகின் மிகக் குள்ளமான மனிதர் என்று கின்னஸ் புத்தகம் அறிவித்து உள்ளது.

27 வயதாகும் இவர் சொத்துகள் தொடர்பாக வழக்கறிஞரிடம் போனால் 'பெரியவர்களை அழைத்து வா, மனநிலை உனக்கு சரியாக உள்ளதா? என்று மருத்துவரிடம் சான்றிதழ் வாங்கிக் கொண்டு வா என்று அலைய வைக்கிறார்களாம்.

இருந்தாலும், நம்பிக்கையுடன் வாழும் இவர் தற்போது, நல்ல தனக்கேற்ற மணமகளாகத் தேடிக் கொண்டிருக்கிறார்.

'நான் சாதாரண மனிதன்தான் வாழ்க்கையை நேசிக்கிறேன்...' என்று உயர்ந்த சிந்தனையுடன் பேசுகிறார், இந்த குள்ள மனிதர்.

மனிதச் சங்கிலி....!

நிலத்திட்டங்களில் கேரள அரசை மத்திய அரசு புறக்கணிப்பதாக கண்டித்தும், வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கோரியும் கேரளாவில் 698 கிலோ மீட்டர் நீள மனிதச் சங்கிலிப் போராட்டம் நடந்தது.

மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் இந்தப் போராட்டத்தை நடத்தியது.

கேரளாவிலுள்ள இரயில் பாதை நெடுகிலும் இந்த மனிதச் சங்கிலி நீண்டது. சுமார் 30 இலட்சம் மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கு கொண்டனர்.

காசர்கோடு பகுதியில் இருந்து தலைநகர் திருவனந்தபுரம் வரை இந்த மனிதச் சங்கிலி போராட்டம் நடந்தது.

மனிதச் சங்கிலி தொடங்கிய இடத்தில் ஜனநாயக வாலிபர் சங்க அகில இந்திய தலைவர் என்.என். கிருஷ்ணதாசும், முடியும் இடத்தில் மாநில செயலாளர் எம்.வி.ஜெயராஜனும் நின்றிருந்தார்கள்.

திருவனந்தபுரத்தில் தொடங்கிய இப்போராட்டம் 15 நிமிடம் கைகோர்த்து நின்றது. இரயில் தண்டவாளத்தில் ஏறி நின்று கைகோர்த்த மக்கள் ஒரே குரலில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

வாலிபர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பினரும் இந்த மனிதச் சங்கிலியில் பங்கேற்றனர். முடிவில் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது.

கேரள மாநிலத்தின் குறுக்காக நடந்த இந்தப் போராட்டம், உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம் பெற்றுவிட்டது. (1999)

ஒரு பாட்டிலின் பயணம்!

ஜெம்ஸ்பர்ச், எட்டு வயது சிறுவன். இங்கிலாந்திலுள்ள சிப்ஸ்விச் நகரைச் சேர்ந்த இவன், ஒரு நாள் தன் பெற்றோர்களுடன் பெலிக்ஸ்டோவ் கடற்கரைக்குச்

சென்றான். அவனுடன் சகோதரன் டேவிட்டும் சென்றிருந்தான்.

இருவரும் விளையாட்டாக ஒரு துண்டுச் சீட்டில், 'நாங்கள் பெரிய ஆபத்தில் மாட்டியிருக்கிறோம். எங்களை எவ்வளவு விரைந்து காப்பாற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்து காப்பாற்றுங்கள்' என்று முகவரியுடன் எழுதினார்கள். அதை ஒரு பிளாஸ்டிக் பாட்டிலுக்குள் போட்டு இறுக்கமாக மூடினார்கள். பின் கடலில் தூக்கிப் போட்டுவிட்டார்கள்.

இதைக் கவனித்த அவர்களின் தாயார் டயானே 'ஏன் இப்படி வீண் வேலை செய்து கடலை அசுத்தம் செய்கிறீர்கள்?' என்று கோபமாகத் திட்டினார்.

ஆனால், அந்த பாட்டில் ஆறு மாத காலம் கடலில் பயணம் செய்து, ஆஸ்திரேலியாவிலுள்ள பெர்த் நகர கடற்கரையில் ஒதுங்கியது.

அதை 24 வயது சார்லஸ் ஹார்போர்டு என்ற இரசாயன ஆராய்ச்சியாளர் கடலில் இருந்து எடுத்தார். உள்ளே இருந்த செய்தியையும் பாட்டிலைத் திறந்து படித்தார்.

உடனடியாக அவர், ஜேம்ஸ்பர்ச்சுக்கு கடிதம் எழுதினார். அதைக்கண்ட அவனுக்கு ஒரே வியப்பு, ஏகமாய் மகிழ்ச்சி அடைந்தான்.

1990-ஆம் ஆண்டு இந்த பாட்டில் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித்து விட்டது. இந்த பாட்டில் 20 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் கடலில் பயணம் செய்திருக்கிறது. இதுதான் கின்னஸ் சாதனையாகி இருக்கிறது.

நீளமான மேஜை!

15,000 பேர்கள் உட்கார்ந்து சாப்பிடக் கூடிய உலகின் மிக நீளமான சாப்பாட்டு மேஜை ஒன்றை லிஸ்பன் நகரின் மேம்பாலம் மற்றும் ஐரோப்பாவின் மிக நீளமான பாலம் என்ற சிறப்புப் பெற்ற இந்த

மேம்பாலத்தில் உணவு தயாரிப்பு நிறுவனம் ஒன்று இந்தச் சாதனையைச் செய்திருக்கிறது.

ஒரு வேளை மதிய உணவு அளித்து இந்த மேஜையை கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம் பெறச் செய்துவிட்டது.

எம்மாம் பெரிய...

ஜப்பானின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான மஜ்டாவானது, பிரிமாசி என்ற புதிய வாகனத்தைத் தயாரித்துள்ளது.

இவ்வாகனத்தை பொதுமக்கள் யாவரும் எளிதில் தெரிந்து கொள்வதற்காக டோக்கியோ புகைவண்டி நிலையத்தில் 311 மீட்டர் நீளமுள்ள போஸ்டரில் இந்த வாகனத்தை இடம் பெறச் செய்தது.

251 துண்டுகளாக இருந்த தாள்களை ஒட்டி இந்த நீள போஸ்டரை உருவாக்கினார்கள். மக்களின் பார்வைக்கு எளிதில் பட்டு, நல்ல வரவேற்பையும் பெற்றது.

உலகின் மிக நீண்ட விளம்பரப் பலகை என்று கின்னஸ் புத்தகமும் இந்த மஜ்டா நிறுவன போஸ்டரை ஏற்றுக் கொண்டுள்ளது.

முதல் குழு.....

ஈரான் நாட்டைச் சேர்ந்த ஆறு பெண்மணிகள் உலக சாதனை படைத்துள்ளனர்.

எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடித்த முதல் இஸ்லாமிய பெண்கள் குழு என்ற பெருமை இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

இக்குழுவில் இடம் பெற்றவர்களில் ஒருவர் பல் மருத்துவர். மற்றொருவர் வீடுகள் அலங்கரிப்பு வல்லுநர். மற்றவர்கள் குடும்பத் தலைவிகள்.

தங்கத்தில் கிரிக்கெட்

முன்பே ஐஸ்பால்சிங் என்பவர் மிகச்சிறிய அளவில் செய்த கலைப் பொருளை விஞ்சும் வகையில் பெஜ்ஜரபு பாபு சாரி என்னும் 22 வயது நகைத் தொழிலாளி தங்கத்தில் 6 மில்லி மீட்டர் நீளம், பிட்சில் 2 மில்லி மீட்டர் உயரம் ஸ்டம்புகளுடன் 3.5 மில்லி மீட்டர் பேட், 0.5 மில்லி கிராம் எடை கொண்ட பந்துடன் சிறிய கிரிக்கெட் 'பிட்ச்' ஒன்றை ஒரு ஊசியின் காதுக்குள் நுழையும் அளவில் செய்துள்ளார்.

தாண்டலில் சாதனை!

ரஷ்யாவின் யெலனா இசின்பயேவா என்ற போல்வால்ட் என்னும் குச்சி ஊன்றித் தாவும் வீராங்கனை 'என்னுடைய கனவு 5 மீட்டர் உயரம் தாண்டுவதே' என்றார்.

இதை எப்போது சொன்னார்...? கடந்த 06.03.05 அன்று ஐரோப்பிய தடகளத்தில் 4.90 மீட்டர் உயரம் தாண்டி உலக சாதனையுடன் தங்கத்தை வென்றபோது.

2001-ஆம் ஆண்டு ஸ்டேசிடிராகிலா என்ற அமெரிக்க வீராங்கனை 4.81 மீட்டர் உயரம் தாண்டிய சாதனையைத்தான் யெலனா முறியடித்தார்.

முத்தச் சாதனை!

அமெரிக்காவில் மின்னி சோட்டி மாநிலத்தில் நியூ பிரைட்டன் என்ற நகரம் இருக்கிறது.

இந்த நகரச் சேர்ந்த ஆல்பிரட் ஏ.ஈ.வொல்ப்ராம் என்பவருக்கு ஓர் உலக சாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது.

என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்? என்று நாளும் பொழுதும் இவர் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில்தான்....

1989-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ்பெல் என்பவர் 8 மணி நேரத்தில் 4,500

பெண்களை முத்தமிட்டு உலக சாதனை செய்திருப்பது இவருக்குத் தெரிய வந்தது... பிறகென்ன...?

முத்தக் கடலில் மூழ்க முனைந்தார். அதற்காக 1990 செப்டம்பர் 15-இல் நடந்த மறுமலர்ச்சித் திருவிழாவைத் தேர்ந்தெடுத்தார்; முத்தச் சாதனையும் படைத்தார் - பதித்தார்.

எட்டு மணி நேரத்தில் 8001 பெண்களுக்கு முத்த மிட்டு, ஜேம்ஸ் பெல்வின் சாதனையை முறியடித்தார்.

மீசையை முறுக்கி....

யாரை விட்டது ஆசை - மீசை!

மத்தியப் பிரதேச மாநிலம், போபாலைச் சேர்ந்தவர், கப்நாத்சிங் பரிஹார். இவர், சுமார் ஒரு மீட்டர் அளவில் மீசை வளர்த்து கின்னஸில் இடம் பிடித்தார்.

இதைக் கண்ட இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ராம்சிங் சவுகான் (45) அவருக்கு எதிராக மீசையை முறுக்கிவிட்டார்....

1984 முதல் தனது மீசையை வெட்டாமல் அதை செல்லமாக தடவி வளர்க்கத் தொடங்கினார். அதன் விளைவு...?

சவுகானின் மீசையின் அளவு இப்போது சுமார் 2.15 மீட்டர் உலகிலேயே இப்போது நீளமான மீசை இவருடைய மீசைதான்.

உலக சாதனை புத்தகமான கின்னஸில் இவரது மீசையே சாதனை மீசையாக உள்ளது.

கொல்கத்தாவில் நடந்த ஒரு சுற்றுலா கண்காட்சியில் மீசையைத் தடவிக் காட்டி எல்லாரையும் ஒரு கலக்கு கலக்கிவிட்டார்.

இப்படித் தட்டுங்க!

தினமும் காலையில் இரண்டு மணி நேரம் தொடர்ந்து கை தட்டினால் ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம்.

கிருஷ்ணசந்த் பஜாஜ் என்ற 74 வயது மனிதர் ஏழு மாதங்கள் இப்படித் தொடர்ந்து கைதட்டினார். முடி கொட்டுவது நின்றது; மங்கிய பார்வை நன்கு வெளிச்சப் பட்டது.

ஒரு மத சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்திற்குச் சென்றபோது இப்படி கை தட்டினால் கண் பார்வை திரும்பக் கிடைக்கும் என்ற சிந்தனை இவருக்குத் தோன்றியதாம்.

ஒரு மணி நேரத்திற்கு 5,000 ஆயிரம் தடவை கை தட்டுவாராம். சில சமயம் சேர்ந்தார்போல் 10 ஆயிரம் தடவை ஒரே நேரத்தில் கை தட்டுவாராம்.

டெல்லியில் வாழும் இவர் தற்போது கை தட்டும் காட்சி ஒன்றை நடத்துகிறார்.

கை தட்டும் பயிற்சியின் மூலம் உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வகுப்பு ஒன்றையும் நடத்தி வருகிறார்.

உலகிலேயே வேகமாக கை தட்டும் நபர் இவர் என்று கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடித்துள்ளார்.

தனக்குத் தானே....

கலிபோர்னியாவைச் சேர்ந்த ஸ்டண்ட் டிரைவர் ப்ரியன் கார்சன் என்பவர் கார்களை வரிசையாக நிற்க வைத்து, இவர் காரை ஓட்டி வந்து 300 அடி தூரத்தைத் தாண்டி புதியதொரு 'நியூ ஆட்டோ' உலக சாதனையைப் படைத்திருக்கிறார்.

லாஸ்வேகஸில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின்போது இதற்கு முன்பே 298 அடி தூரத்தை இதேபோல் தாண்டி சாதனை படைத்துள்ள இவர், தன்னுடைய சாதனையை தானே முறியடிக்கும் வகையில் 314 அடி தூரத்தைத் தாண்ட முயன்றபோது கடைசிக் காரைத் தாண்ட முடியாமல், 300 அடி தூரத்தை மட்டுமே தாண்டி கடைசிக் காரை நொறுங்க வைத்து சோதனை படைக்க வேண்டியதாயிற்று.

''இப்போது முடியாவிட்டால் என்ன? மீண்டும் முயன்று என்னுடைய சாதனையை நானே முறியடித்துக் காட்டுவேன்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

நீரில் குதித்து!

ஜாக்வால்ஷ். ஒரு புரஃபஷனல் ஸ்டண்ட் டைவர். 40 வயதான இவர், நாள் ஒன்றுக்கு நான்கு முறையாவது மிக உயரத்திலிருந்து நீரில் குதித்து, பார்வையாளர்களை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்துவிடுவார்.

உடலில் நெருப்பு வைத்துக் கொண்டு மிக உயரத்தில் இருந்து நீரில் குதித்து கின்னஸ் புத்தகத்திலும் இடம் போட்டவர்.

கத்தரிச் செடி....

கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர், அப்துல்மப்சூர். இவருக்கு வயது 50. தோட்டக்கலை நிபுணர்.

இவர் மைசூர் அருகே ஹன்சூரில் உள்ள தனது தோட்டத்தில் 20 அடி உயரமுள்ள கத்தரி செடியை வளரச் செய்து சாதனை படைத்துள்ளார்.

இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. இந்த செடியின் மூலம் 80 கிலோ கத்தரிக்காய் கிடைத்ததாக அவர் கூறியுள்ளார்.

அந்தச் செடி இன்னும் வளரும் என்பது அவரது எண்ணம்.

கார்டூன்.....

காமிக்ஸ் படங்களும், தொடர்களும் செய்து இன்று புகழ் பெற்றிருப்பவர், ப்ராண்குமார் சோப்ரா. 54 வயதாகும் இந்தக் கார்டூனிஸ்ட்டின் 175 புத்தகங்களும், 1,45,000 படங்களும் இதுவரை வெளிவந்துள்ளன.

இவரது கார்ட்டூன்கள் இந்தி, வங்காளம், குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி, கன்னட மொழி பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

இந்தியாவில் வரும் ஆங்கிலப் பத்திரிகைகள் இன்றும் வெளிநாட்டு காமிக்ஸ்களையே விரும்புவதாகக் குறைபட்டுக் கொள்கிறார், இந்தச் சாதனையாளர்.

விண்ணிலே நடந்து....

இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர், வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ்.

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலத்தில் அமெரிக்க வீரர்களுடன் சுனிதா வில்லியம்சும் (2006) விண் வெளிக்கு சென்றார்.

அவர் விண்வெளியிலுள்ள சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தில் தங்கி இருந்தார். அவருடன் ஆராய்ச்சி நிலையத்தின் கமாண்டர் லோபஸ் அலிகிரியா மற்றும் ஒரு வீரரும் இருந்தனர். இவர்கள் மூவரும் சில மாதங்கள் தங்கி ஆய்வில் ஈடுபட்டனர்.

இந்த வேளையில் சுனிதாவும், கமாண்டர் லோபஸும் ஆய்வு நிலையத்தை விட்டு இரண்டு முறை வெளியே வந்து விண்வெளியில் நடந்தனர்.

அப்போது அவர்கள் மொத்தம் 15 மணி நேரம் நடந்தனர். மூன்றாவது முறையாக சுனிதாவும் லோபஸும் விண்வெளியில் நடந்தனர்.

இந்த 7 மணி நேர விண்வெளி நடைமூலம் சுனிதா மொத்தம் 22 மணி நேரம் 27 நிமிடம் நடந்து விண்வெளியில் அதிக நேரம் நடந்த பெண் என்ற உலக சாதனையைப் படைத்துள்ளார்.

கன்று நட்டு நின்று விட்டார்....

உள்ளத்தில் உறுதியும், நம்பிக்கையும் இருந்தால் மலையைக்கூட நகர்த்தி வைக்கும் ஆற்றல் வந்துவிடும் என்று சொல்வார்கள்.

தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நட்டு சாதனை படைத்துள்ளார், சீக்கிய மதகுரு ஒருவர்.

பஞ்சாபில் 250 கிலோ மீட்டர் தூரத்துக்கு சாலை யோரத்தில் வரிசையாக அவரது முயற்சியால் நடப்பட்ட மரக்கன்றுகள் தற்போது நிழல் தரும் மரங்களாக வளர்ந்து நிற்கின்றன.

பஞ்சாபிலுள்ள கதூர் சாகிப் குருத்வாராவின் தலைவர் பாபா சேவாசிங். 47 வயதாகும் பாபா ஒரு முறை கடும் வெயிலில் நடந்து சென்று கொண்டிருந்தார். வெப்பம் தாங்காமல் ஏதாவது ஒரு மரத்தடியில் ஓய்வு எடுக்க எண்ணினார்.

ஆனால், சாலையோரத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு மரம் கூட இல்லை. இதைக்கண்ட பாபா மிகவும் மனம் நொந்து போய்விட்டார். சாலையோரங்களில் மரக்கன்றுகளை நடுவதுதான் இனி தனது முக்கிய பணி என்று முடிவு செய்தார்.

தனது எண்ணத்தை, தன்னை நாடி வரும் பக்தர் களிடம் தெரிவித்தார். அவர்களும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். குருத்வாராவுக்குச் செல்லும் சாலையில் மரக்கன்றுகளை நட முடிவு செய்தனர்.

அதன்படியே தன்னிடம் ஆசி பெற வரும் பக்தர்களுக்கு மரக்கன்றுகளை பிரசாதமாக அளித்தார், பாபா.

இதை, சாலையோரத்தில் நட்டுவிட்டு செல்லும் படியும் கூறினார். பக்தர்களும் அப்படியே செய்தனர்.

கடந்த 8 ஆண்டுகளில் ஒரு இலட்சத்திற்கும் மேலான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

சண்டிகரிலிருந்து கதூர் சாகிப் குருத்வாராவுக்கு செல்லும் 250 கிலோ மீட்டர் தூர சாலையின் இருபுறமும் மரங்கள் வளர்ந்து பசுமையாய் காட்சியளிக்கிறது.

இதனால், இச்சாதனையாளர் பாபாவுக்கு 'பச்சை பாபா' என்ற பெயரே ஏற்பட்டு விட்டது.

ரிப்பனுக்குக் கீழே....

குவாலியரைச் சேர்ந்த சிறுவன், அவனுக்கு வயது ஐந்துதான் பெயர், மஸ்கான் குப்தா.

இவன் ஸ்கேட்டிங் விளையாட்டில், வரிசையாக நிறுத்தப்பட்ட 40 டாசுமோ கார்களுக்கு அடியில் ஸ்கேட்டிங் செய்தபடியே நுழைந்து வெளியேறி உலக சாதனை படைக்க திட்டமிட்டு அதற்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்ற வேளையில், இங்கே ஒரு சிறுவன் வேறொரு வகையில் சாதனையே செய்துவிட்டான்.

உத்தரப்பிரதேச மாநிலம் மஹோபா மாவட்டம் சஹோஜனா கிராமத்தைச் சேர்ந்தவன் இந்திரபால் அகிர்வால்.

இந்தூரிலுள்ள புனிதபால் தொடக்கப் பள்ளியில் 4-ஆம் வகுப்பு பயின்று வருகிறான். ஸ்கேட்டிங் விளையாட்டில் மிகவும் கெட்டிக்காரன்.

ஸ்கேட்டிங்கில் கின்னஸ் உலக சாதனை படைக்க வேண்டும் என்பதுதான் தனது இலட்சியம் என்று பயிற்சியாளர் நாகேஷ்வியாசிடம் அடிக்கடி சொல்வான்.

அதன்படியே, அவன் படிக்கும் பள்ளி வளாகத்தில் தன் சாதனையைத் தொடர்ந்தான்.

பச்சை நிற ரிப்பன் ஒன்று தாழ்வாகக் கட்டப்பட்டது. தரைக்கும், ரிப்பனுக்கும் 6.5 அங்குலம் இடைவெளிதான் இருந்தது. ஸ்கேட்டிங் செய்தபடியே அந்த ரிப்பனுக்கு அடியில் நுழைந்து இந்திர பால் சாதனை செய்தான்.

அவனது உடல் ரிப்பன் மீது உரசவில்லை. அவனது சாதனையப் பார்த்து அங்கு கூடியிருந்தோர் வியப்பில் ஆழ்ந்தனர். இந்தச் சாதனையின் வீடியோ தொகுப்பை கின்னஸ் புத்தகக் குழு கேட்டுள்ளது.

இந்தச் சாதனை சிறுவன் பார்வையற்றவன் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தலையில்... இளநீர்!

ஒரிசா தலைநகர் புவனேஸ்வரைச் சேர்ந்த கேசப் ஸ்வைனுக்கு வயது 40.

இவருக்கு தான் ஏதாவது சாதனை செய்து தன் பெயரை நிலை பெறச் செய்ய வேண்டும் என்று இளமையில் இருந்தே ஆர்வம் இருந்தது.

அந்த அடிப்படையில் புவனேஸ்வரில் உள்ள லோங்ராஜ் கோயிலின் முன்பாக இளநீரை தலையில் அடித்து உடைப்பது என்று முடிவு செய்து அதன்படியே செய்யவும் செய்தார்.

இதில் இவர் சாதனை இதுதான்... ஒரு நிமிடத்தில் 100 இளநீர் காய்களை தலையில் அடித்து உடைத்தார்.

முத்தோ முத்து!

உலகில் அதிக விலைக்கு ஏலம் போய் ஒரு முத்துமாலை கின்னஸில் பதிந்துள்ளது.

பரோடா மன்னர் குடும்பத்துக்காக 1850-இல் 68 இயற்கை முத்துக்களைக் கொண்டு மாலை தயாரிக்கப் பட்டது.

பிறகு, மன்னரின் மகன் அதை தனது 2-வது மனைவிக்கு காதல் பரிசாக அளித்தார். பிறகு அந்த மாலை பலர் கைமாறி அமெரிக்காவைச் சேர்ந்த ஏல நிறுவனமான கிறிஸ்டி வசம் சென்றது.

அதை ஏலம் விட அறிவிக்கப்பட்டதும்; தங்கள் வம்சத்துக்குச் சொந்தமான முத்துமாலையை மீட்க இந்திய நீதிமன்றங்களில் பரோடா மன்னர் குடும்பத்தினர் வழக்குத் தொடர்ந்தனர். ஏலத்தைத் தடுக்க முயற்சி செய்தனர். இருந்தும் திட்டமிட்டபடி முத்துமாலையை கிறிஸ்டி நிறுவனம் ஏலம் விட்டது.

அதை போன் மூலம் ஒருவர் ரூ.29 கோடிக்கு ஏலம் எடுத்தார்.

இதற்கு முன் இயற்கை முத்துக்களால் தயாரிக்கப் பட்ட முத்துமாலை ரூ.13,12 கோடிக்கு ஏலம் போனது தான் உலக சாதனையாக இருந்தது.

அதைவிட இரு மடங்குக்கு மேல் விலைபோன பரோடா மன்னர் குடும்ப முத்துமாலை புதிய உலக சாதனை படைத்துள்ளது.

பேத்தியோடு பாட்டியும்....

கல்வி கற்கவும், பட்டம் பெறவும் வயது தடையே இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு இது....

தன்னோடு படிக்கும் மாணவிகளுடன் அமர்ந்து, தற்கால அரசியல் பாடத்தில் சந்தேகம் கேட்டு வருகிறார் 95 வயதிலும் ஆர்வம் குன்றாத, நோலா ஓச்.

போர்ட்ஹேஸ் மாகாண பல்கலைக் கழகத்தில் படித்து வருகிறார் இவர்.

வரும் மே மாதம் (2007) 12-ம் தேதி புதிய உலக சாதனைப் படைக்க உள்ளார். உலகின் மிக முதிய கல்லூரி பட்டதாரி என்ற பெருமை இவருக்கு கிடைக்கப் போகிறது.

அதே தினத்தில் இவரது 21 வயது பேத்தி அலெக்சாண்டிராவும் பட்டம் பெற உள்ளார்.

நேலாவுக்கு 13 பேரன். பேத்திகளும் 15 கொள்ளுப் பேரன், பேத்திகளும் உள்ளனர்.

2004-ஆம் ஆண்டில் 90 வயது மோஜல்லி ரிச்சர்ட்ஸ் பட்டம் பெற்றதுதான் இதுவரை உலக சாதனையாக இருந்து வருகிறது.

அதை முறியடித்து புதிய சாதனை படைக்கப் போகும் வாய்ப்பு, பாட்டி நோலாவுக்கு கிடைத்துள்ளது.

மீனாட்சிக் கல்லூரியின் மாணவி சாதனை!

சென்னை - மீனாட்சி கல்லூரியில் பி.எஸ்.சி. இரண்டாமாண்டு பயிலும் இலட்சுமி கடந்த 27 மார்ச் (2007) மாதம், விருகம்பாக்கம் சமுதாய நலக்கூடத்தில் கின்னஸ் சாதனைக்காக 30 மணி நேரம் தொடர்ந்து, 'இந்த சமுதாயம்' என்ற தலைப்பில் எழுதி சாதனை படைத்துள்ளார்.

ஜெயதாரணி அறக்கட்டளை சார்பில் ஏற்பாடு செய்த இந்த சாதனை நிகழ்ச்சியை வழக்கறிஞர்கள், காவல் துறை உயர் அதிகாரி, மருத்துவர் உள்ளிட்ட 15 பேர் கொண்ட நீதிபதிகள் நடுவராக இருந்து கண்காணித்தனர். 30 மணி நேரத்தில் 500-க்கு மேற்பட்ட பக்கங்களை எழுதி குவித்தார், இலட்சுமி.

இதற்கு முன்னர், எத்திராஜ் கல்லூரி மாணவி கவிதா 26 மணி நேரம் தொடர்ந்து எழுதிய சாதனையை - தற்போது இலட்சுமி முறியடித்துள்ளார்.

எதிர்காலத்தில் இலட்சுமியை யார் முறியடிக்கப் போகிறார்களோ...?

சின்ன குட்டி....

நாயின் பெயர், டான்சர். பெயருக்கு ஏற்றபடி டான்ஸ் ஆடுமோ என்னவோ... ஆனால், தனது பிறப்பாலே உலக சாதனை படைத்துவிட்டது அது.

ஆம், சிஹுவாவ்ஹுவா வகையைச் சேர்ந்த நீண்ட முடி கொண்ட இந்த நாய்தான் உலகின் மிகச் சிறிய நாய்.

இதன் எடை 510. கிராம். உயரம் பத்தே சென்டி மீட்டர். அதாவது நம்மூர் மண்டிகளில் புகுந்து விளையாடும் பெருச்சாளி அளவு.

புளோரிடாவின் லீஸ்பெர்க் நகரைச் சேர்ந்த ஜென்னி-கோம்ஸ் என்ற பெண்மணியின் செல்லம்தான். உலக சாதனையை நிகழ்த்தியுள்ள டான்சரின் எஜமானி!

தாடியின் நீளம்....

மத்தியப் பிரதேச மாநிலம், போபாலைச் சேர்ந்தவர், கப்நாத்சிங் பரிஹார். இவர் சுமார் 1 மீட்டர் நீளம் மீசையை வளர்த்து கின்னஸ் சாதனை புரிந்தார்.

வயது 77 கொண்ட பெண்மணி ஹீசெனலா. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர், 18 அடி நீளம் கொண்ட கூந்தலை வளர்த்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தார்.

இந்த நிலையில் ஒருவர், தாடியையும், தலை முடியையும் வளர்த்து சாதனை முயற்சியில் ஈடு பட்டுள்ளார்.

பீகார் மாநிலம், சமஷ்டிபூர் மாவட்டத்திலுள்ளது மாணிக்கா கிராமம். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரர், லகான்.

இவரது தலைமுடியின் நீளம் 13 அடி. தாடியின் நீளமோ 19 அடி 7 அங்குலம்.

இத்தனை நீள முடிகளையும் மிகவும் பாதுகாப்பாக காத்து வருகிறார்.

தன் முடி வளர்ப்பை கின்னஸிற்கும் காட்ட புறப்பட்டுவிட்டார், லகான்.

விழியற்ற... வித்தகர்.....

விழிகளின் வெளிச்சம் விலகிப் போனால் என்ன...? சாதனைகள் படைக்க முடியாதா என்ன... என்பதுபோல் இச்செயல் இருக்கிறது.

குஜராத் மாநிலத்தின் சூரத் நகரைச் சேர்ந்தவர் ஹஸ்முக்பாய்.

இவருக்கு கண் தெரியாது. ஆனால், கண்கட்டி வித்தையில் நிபுணர்.

இவர் பிறவியிலேயே பார்வை இழந்தவர் அல்ல. ஒரு நாள் ஓடும் இரயிலிலிருந்து கீழே விழுந்து தலையில் பலமாக அடிபட்டக் காரணத்தால், தன் பார்வையை நிரந்தரமாக இழந்துவிட்டார். ஆனால், அவர் தைரியத்தையும் பொறுமையையும் இழக்கவில்லை.

பல 'மாஜிக்' நிபுணர்களின் வீட்டு வாசல்படிகளில் ஏறி இறங்கி தனக்கு மாஜிக் கலையைக் கற்று கொடுக்கும்படி மன்றாடி கேட்டுக் கொண்டார்.

அவர்களும் மனமிறங்கி கற்றுக் கொடுக்க தேர்ச்சி பெற்று ஆயிரக் கணக்கான ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்று வருகிறார்.

இதுவரை அவர் சுமார் 1500 'மாஜிக் ஷோக்'களை சிறப்பாக நடத்தி பெயரும் புகழும் சம்பாதித்திருக்கிறார்.

‘‘எனக்கு முன்பே ‘மாஜிக்’ பல தெரிந்திருந்தன. கண்கள் போன பிறகு அவைகளை கண்ணில்லாமலேயே செய்ய பழகி அதில் வெற்றியும் பெற்றேன். பிறகு பல நிபுணர்கள் என் கலையை மேம்படுத்த பற்பல விதத்தில் உதவி செய்தனர். அவர்கள் எல்லாருக்கும் நான் நன்றி கடன்பட்டவன்’’ என்கிறார் இந்த சாதனையாளர். அவருடைய சாதனையில் அவர் மனைவி யசோதா வுக்கும் பங்கு உண்டு.

52 வயதில்....

தமிழக நீச்சல் வீரர் குற்றாலீசுவரன் மிக இளம் வயதில் - ஒரே ஆண்டில் ஆறு கடல்களைக் கடந்து பழைய சாதனையை முறியடித்து கின்னஸில் இடம் பிடித்தார்.

அருண்பாலாஜி ஐந்து வயதாக இருக்கும்போதே சென்னையில் 5,600 மீட்டர் தூரத்தை 3 மணி 5 நிமிட நேரத்தில் நீச்சலில் கடந்து கின்னஸில் இடம் பிடித்தார்.

ட்ரூணா நிஷாத். இவளுக்கு வயது நாலரைதான். ஆனால், 6,050 கிலோ மீட்டர் தூரத்தை 6 மணி 39 மணியில் நீந்தி சாதனை படைத்தாள்.

ஜானி வெய்ஸ் முல்லர் என்பவர் 100 மீட்டர் தூரத்தை ஒரு நிமிட நேரத்துக்கும் குறைவான நேரத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்தார்.

இந்த சிறுவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இடையே ஒரு ‘வாலிபர்’ செய்துள்ள தற்போதைய சாதனை இது....

அமேசான் நதியின் 5,300 கிலோ மீட்டர் தூரத்தை நீந்திக் கடப்பது மார்ட்டின் ஸ்ட்ரெல் என்ற இந்த 52 வது மனிதரின் நோக்கம்.

பிரேசில் நாட்டில் அமேசான் நதியின் பகுதியில் அவர் நீந்திக் கொண்டிருந்தபோது, கடுமையான வெயிலால் உடலில் கட்டிகள், இரத்தத்தை ருசிப்பதற்காக கூர்மை யான பற்களால் கடிக்கும் மீன் இனங்கள். முதலைகள் தாக்கும் அபாயம் அத்தனையும் தாண்டிதான் இவர் சாதனை தூரத்தில் பாதியைக் கடந்திருக்கிறார். இத்தனை

துன்பத்திற்குப் பிறகும், சாதனையை நோக்கி நீந்திக் கொண்டிருக்கிறார். எல்லாம் கின்னஸிற்காகத்தான்.

விண்ணிலே ஓடி....

மண்ணிலும், மலையிலும் ஓடி சாதனை படைப்பவர் இடையே விண்ணிலே ஓடி ஒரு பெண்மணி சாதனைப் படைத்திருக்கிறார்.

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்கலத்தில் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்ற வீரர்களுடன் கடந்த (2006) ஆண்டு விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வு நிலையத்திற்குச் சென்றார்.

அவர் தற்போது விண்வெளியில் மிதக்கும் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். அவருடன் மேலும் நான்கு விஞ்ஞானிகள் உள்ளனர்.

அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் நேற்று முன்தினம் ஒரு மாரத்தான் ஓட்டப் போட்டி நடந்தது.

அந்தப் போட்டியில் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்தபடியே கலந்து கொள்ள சுனிதா முடிவு செய்தார்.

ஹூஸ்டனில் மாரத்தான் போட்டி தொடங்கிய அதே நேரத்தில் விண்வெளி ஆய்வு மையத்தில் அமைக்கப் பட்டிருந்த நடை மேடையில் (டிரட்மில்) அவர் ஓடத் தொடங்கினார்.

அவர் மணிக்கு 13 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடினார். அதே சமயம் அவர் மணிக்கு 2,480 கிலோ மீட்டர் வேகத்தில் பூமியை சுற்றிக் கொண்டிருந்தார்.

அந்த மராத்தான் போட்டியை அவர் தரையில் இருந்தபோது ஏற்கெனவே மராத்தான் போட்டிகளில் கலந்து கொண்டு இருக்கிறார்.

விண்வெளியில் மிதக்கும் நிலையத்தில் இருந்து கொண்டு தரையில் நடக்கும் மராத்தான் போட்டியில் கலந்து கொண்டு இதுவரை யாரும் சாதனை படைத்தது இல்லை. சுனிதாதான் முதன் முறையாக இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார்.

தன் சாதனையைப் பற்றி சுனிதா கூறியது... ‘‘எனது இந்த சாதனை மற்றவர்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருக்கும். இளைஞர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்க எனது இந்த அபூர்வ சாதனை உதவும்’ என்கிறார்.

கண்கொள்ளாத கர்ப்பிணிகள்!

தென்னாப்பிரிக்கா, ஜோகன்னஸ்பார்க்கில் ‘பார்புவர் பேபி ஷோ’ என்ற நிகழ்ச்சிக்கு ஓர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதில், நூற்றுக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளை ஒரே இடத்தில் திரட்டி உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம் பிடிப்பதே அந்த அமைப்பின் நோக்கம். அதன்படியே ஏற்பாடு நடந்தன.

ஆனால், எதிர் பார்த்ததைவிட அதிகமாக ஆயிரத்து 146 கர்ப்பிணிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழா ஏற்பாட்டாளர்களை திணற வைத்துவிட்டனர்.

இந்நிகழ்ச்சியின் அமைப்பாளர் ப்ரோஜெனி பாதெர் கூறுகையில், ‘ஏராளமான கர்ப்பிணிகளை ஒரே இடத்தில் ஒன்று கூட்டுவதால் ஏதாவது பாதிப்பு ஏற்படுமோ என கவலைப்பட்டோம்.

நல்ல வேளையாக இதில் கலந்து கொண்ட யாருக்கும் பிரசவ வலி ஏற்படவில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு அருகிலுள்ள மருத்துவமனைகளில் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதுபோன்ற நிகழ்ச்சியால் உலக சாதனை படைத்ததை நினைக்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

உண்மையில் இதில் பங்கேற்பதாக இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் தங்களது பெயர்களை பதிவு செய்திருந்தனர்.

ஆனால், அதில் சிலருக்கு நிகழ்ச்சி நடப்பதற்கு முன்னதாகவே குழந்தைகள் பிறந்துவிட்டன. இன்னும் பலர் பிரசவ வலி ஏற்பட்டு மருத்துவமனைகளில்

அனுமதிக்கப்பட்டு விட்டனர். இதனால், எண்ணிக்கை ஆயிரத்து 146 ஆக குறைந்துவிட்டது' என்கிறார்.

இந்த வித்தியாசமான நிகழ்ச்சி, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறுவதற்காக பரிந்துரை செய்யப் பட்டுள்ளது.

உலகிலேயே, கர்ப்பிணிகள் ஒன்றாகச் சேர்ந்து கூடியது இதுவே முதல் முறை என்பதால், இந்நிகழ்வு உறுதியாக கின்னஸில் இடம் பெறும் என்பது உண்மை.

அதேவேளை, இந்த சாதனையை எதிர்காலத்தில் எந்த நாடு முறியடிக்கப் போகிறது என்பதை மட்டும் பொருத்திருந்து பார்ப்போம்.

பூலா சௌத்திரியின்....

ஐந்து கண்டங்களில் உள்ள கடல்களை நீந்திய முதல் வீராங்கனையாக கொல்கத்தாவைச் சேர்ந்த பூலா சௌத்திரி உயர்ந்தார்.

29.05.05 அன்று தென்னாப்பிரிக்காவில் ராப்பன் தீவிலுள்ள நன்னம்பிக்கை முனையில் நீந்தினார்.

இதன் மூலம் ஐந்து கண்டங்களில் நீந்திய பெருமை கிடைத்தது. கடந்த ஆண்டு ஏழு ஜலசந்திகளை நீந்திய முதல் பெண் என்ற சிறப்பைப் பெற்றார்.

இப்படியும் ஒரு சாதனை

கால்பந்தைவிட பெரிய பந்து. இதில் பிடித்துக் கொள்ள கைப்பிடி வைத்துள்ள அதிக எடை தாங்கும் ரப்பர் பந்துகள் மீது உட்கார்ந்து குதித்து குதித்து நகர்வதில் உலக சாதனைப் படைத்துள்ளனர்.

600 பேர் இலண்டனின் மில்லினியம் பாலத்தின் மீது குதித்து வந்து சாதனைப் படைத்தனர்.

இதற்கு முன் 2003-ஆம் ஆண்டில் இதே பகுதியில் 551 பேர் இப்படி பந்து மீது அமர்ந்து குதித்து வந்தது உலக சாதனையாக இருந்தது.

அது இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

உலகில் நாணயமானவன்

ஒரிசாவின் தலைநகர் புவனேஸ்வரைச் சேர்ந்த 8-ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் தேபிபிரசாத் மங்கராஜ்.

இவன் 130 நாடுகளைச் சேர்ந்த 40 ஆயிரம் அரிய நாணயங்கள் மற்றும் ரூபாய் நோட்டுக்களை சேர்த்து வைத்துள்ளான்.

இவற்றில் சில நாணயங்கள் 800 ஆண்டுகள் பழமையானவை. சத்ரபதி சிவாஜியின் காலத்தில் வெளியிடப்பட்ட தங்க நாணயம் மற்றும் 1800 மற்றும் 1810-ஆம் ஆண்டுக்கிடையில் கிழக்கிந்தியக் கம்பெனி வெளியிட்ட நாணயங்கள், 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களும் உள்ளன.

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் போகிறான், மங்கராஜ்.

சமையலில்...

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த முன்னணி பாலாடைக் கட்டி (சீஸ்) தயாரிப்பு நிறுவனம் எம்மி, புதிய உலக சாதனைக்காக அமெரிக்கா, நியூயார்க் நகரில் ஒரு செயலில் ஈடுபட்டது.

சுவிஸ் நாட்டின் பிரபல உணவு வகையான 'பாண்டியூ'வை சுவிட்சர்லாந்துக்கு வெளியே 1,300 கிலோ எடையில் பிரம்மாண்டமாகத் தயாரித்து கின்னஸ் சாதனை படைப்பதே அதன் இலட்சியம்.

இந்த 'பாண்டியூ' பலகாரத்தில் 700 கிலோ பாலாடைக் கட்டி இருக்கும். சாதனை படைக்கப்பட்டதும், இது 3,000 பேர்களுக்கு விநியோகிக்கப்படுமாம்.

கருப்பை

இந்தியாவைச் சேர்ந்த மகப்பேறு சிறப்பு மருத்துவர்கள் பிரகாஷ் திரிவேதி (லேப்ரோஸ்கோபி அறுவை சிகிச்சை நிபுணர்), வியோமேஷ்ஷா (வெஜினல்

சர்ஜன்) ஆகிய இருவரும் சேர்ந்து மும்பையில் 12 மணி நேரத்தில் கருப்பை அகற்ற வேண்டிய 23 பெண்களுக்கு வயிற்றைக் கிழிக்காமல் கருப்பைகளை அகற்றினார்கள்.

பட்டன் துவாரம் அகலத்தைப் பயன்படுத்தி, புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த சிகிச்சை அளிக்கப்பட்டது. தையல் ஏதும் போடவில்லை என்பது கூடுதலான செய்தி.

இந்தப் புதிய முறை அறுவை சிகிச்சையை இந்தியா முழுவதும் 300 மருத்துவர்கள் பார்த்துக் கொண் டிருந்தனர். அவர்கள் அனைவரும் இருவரையும் பாராட்டினார்கள்.

கருப்பை நீக்கப்பட்ட 23 பெண்மணிகளும் 24 மணி நேரத்தில் வீடு திரும்பினார்கள். 12 மணி நேரத்தில் இரு மருத்துவர்களால் 23 கருப்பைகள் அகற்றப்பட்டது உலக சாதனை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பறந்த சாதனை!

இந்திய விமானப் படையின் 75-ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அதை முன்னிட்டு விமானத்தில் 64 நாட்களில் உலகைச் சுற்றி வந்த சாதனைப் பயணத்தில் விமானப்படை அதிகாரிகளான அனில்குமார், ராகுல் ஆகியோர் ஈடுபட்டனர்.

சாதனையில் ஈடுபட்ட அவர்கள், அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலம் அன்சோரேஜ் பகுதியில் பறந்தனர். ஆகஸ்ட் (2007) 4-ஆம் தேதி தங்கள் பயணத்தை முடித்தனர்.

இதுபோன்ற இலகு விமானத்தில் 2001-ஆம் ஆண்டு 99 நாட்களில் உலகைச் சுற்றி வந்ததுதான் சாதனையாக இருந்தது. அதை இந்திய விமானப்படை அதிகாரிகள் முறியடித்தனர்.

இவர்கள் மக்கள்...

உத்திரப் பிரதேச மாநிலத்தில் மிகவும் குறைந்த அளவே வனப்பகுதி உள்ளது. மாநிலத்தின் மொத்த

பரப்பளவில் 9.3 சதவீத பகுதியில்தான் மரங்கள் உள்ளன. இது நாட்டின் சராசரியான 23 சதவீதத்தைவிட மிகக் குறைவு.

இதனால் உ.பி. முழுவதும் ஒரே நாளில் ஒரு கோடி மரக் கன்றுகளை நட அம்மாநில அரசு முடிவு செய்தது. மரக் கன்று நடும் சாதனை திருவிழா நடந்தது. காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, அவரது தொகுதியான ரேபரேலியாவில் மரக் கன்றுகளை நட்டார். முதல்வர் மாயாவதி லக்னோவில் நடந்த விழாவில் பங்கேற்றார். ஹத்ராஸ் என்ற இடத்தில் உள்ள வனப்பகுதி மரங்களே இல்லாமல் காய்ந்து போய் கிடந்தது. அங்கு 40 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

விழாவன்று நடப்பட்ட ஒரு கோடி மரக் கன்றுகளில், 50 சதவீத மரக்கன்றுகளை பராமரிக்கும் பொறுப்பு உள்ளூர் விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மரக் கன்றுகளைப் பள்ளிக்கூடங்கள், சேவை அமைப்புகள் பராமரிக்கும். குறைந்த மரக்கன்றுகளை நட்டுவிட்டு, அதிக அளவு நட்டுவிட்டதாக அரசு அதிகாரிகள் பொய் கணக்கு தருவதைத் தடுக்க மாநிலம் முழுவதும் நடந்த மரக்கன்று நடும் விழாக்களை வீடியோவில் பதிவு செய்து உள்ளனர்.

பூவாய் சாதனை!

2007-இல் நடந்த ஓணம் பண்டிகையின்போது, கேரள மாநிலம், கொச்சியில் உள்ள ராஜீவ் காந்தி உள் விளையாட்டு அரங்கத்தில் பிரமாண்ட பூக்கோலம் அமைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

நடன...

ஒருவரோடு ஒருவர் தோள் மீது கை போட்டபடி நீண்ட வரிசையில் நடன நிகழ்ச்சி நடந்தது.

சைப்ரஸ் நாட்டின் தலைநகர் நிகோசியா நகரிலிருந்து 64 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது அயியா நபா என்ற கடற்கரையோர கிராமம்.

அங்குள்ள பீச்சில்தான் இவர்கள் நடன நிகழ்ச்சியை நடத்தினர். சிர்தகி என்று அழைக்கப்படும் இந்த நடனம் கிரேக்க நாட்டின் புகழ்பெற்ற நடனமாகும். கின்னஸ் உலக சாதனை படைப்பதற்காக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 268 கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

94-இன் சாதனை!

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பில்லிஸ் டர்னர் என்ற பாட்டிக்கு 94 வயதாகிறது. இந்த வயதில், அடிலெய்டு பல்கலைக் கழகத்தில் 'மனித வர்க்கம்' குறித்த பாடத்தில் முதுகலை பட்டப் படிப்பை முடித்து விழாவில் பட்டம் பெற்றுள்ளார்.

உலகிலேயே அதிக வயதில் பட்டம் பெற்ற பெண் இவரே என்பதால் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார்.

பட்டாணி சாதனை!

வெளிநாடுகளில் அவ்வப்போது விநோதமான விளையாட்டுகள் நடக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு யார் நீண்ட தூரம் எச்சில் துப்புவது என்பதில் போட்டி வைத்து சாதனை படைத்தார்கள்.

இப்போது சிறிது வித்தியாசமாக, ஜெர்மனியில் உள்ள டியூரன் நகரில் பட்டாணியை வாயில் வைத்து, யார் நீண்ட தூரம் துப்புகிறார்கள் என்ற போட்டி நடத்தப்பட்டது. அதுவும் உலகக் கோப்பைப் போட்டியாம். 33-ஆவது முறையாக இது நடத்தப்படுகிறதாம்.

1974-ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் இந்தப் போட்டியில் ஏராளமானோர் ஆர்வத்தோடு கலந்து கொள்கிறார்கள்.

ஆண்கள் பிரிவில் 21.71 அடி தூரமும், பெண்கள் பிரிவில் 15.24 அடி தூரமும் துப்பியதே உலக சாதனையாக உள்ளது.

சறுக்கிய சாதனை!

கேரளாவில் ஓணம் உட்பட முக்கிய திருநாட்களில் வள்ளங்கழி என்ற பெயரில் படகுப் போட்டிகள் நடத்தப்படுவது உலகமறிந்த செய்திதான். ஒவ்வொரு கட்டு மரத்திலும் நூறு பேர் முதல் 300 பேர் வரை உட்கார்ந்து இடம், வலமாக துடுப்பைச் சுழற்றுவார்கள். இந்தக் கண்கொள்ளாக் காட்சியை காண்பதற்காகவே வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கேரளத்தில் வந்து தங்கிப் பார்ப்பதுண்டு.

அதே மாதிரி உலகின் ஒட்டு மொத்தக் கவனத்தையும் ஈர்ப்பதற்காக, இவர்கள் கடலலைகளை மீறி சறுக்கிச் செல்லும் விளையாட்டைத் தொடங்கிவிட்டனர்.

நூற்றுக்கணக்கான நீர்ச்சறுக்கு வீரர்கள் கலந்து கொள்ளும் இந்நிகழ்ச்சி பிரேசில் உள்ள சாண்டோஸ் என்ற பகுதியில் நடைபெற்றது. கின்னஸ் சாதனையை ஏற்படுத்துவதற்காகத்தான் இந்த நீர் சறுக்கு விளையாட்டு.

பேய்...

ஆஸ்திரேலியா நாட்டில் சிட்னி நகரில் பல்கலைக் கழக மாணவர்கள், பேய் வேடமிட்டு நடித்தனர். 'அதிகம் பேர் பேய் வேடமிட்ட நிகழ்ச்சி' என்ற முந்தைய உலக சாதனையை முறியடிப்பதற்காக இவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர்.

இதிலும் சாதனை!

முத்தம் தர யார் முகம் சுழிப்பார்கள்? ஆமாம்! உம்மா தருவதிலும், பெறுவதிலும் உலக சாதனை படைத்துள்ளனர் ஹங்கேரி ஜோடிகள்.

தலைநகர் புடாபெஸ்டில் உள்ள நாடாளுமன்ற வளாகம் முன்பு, ஒரே நேரத்தில் 12,800 பேர் 'இச்... இச்...' கொடுத்து இதைச் சாதித்துள்ளனர்.

கடந்த 2007, பிப்ரவரி மாதத்தில் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில்தான் ஏராளமானோர் ஒரு

குறிப்பிட்ட நேரத்தில் முத்த மழை பொழிந்து சாதனை படைத்தனர். இப்போது ஹங்கேரி ஜோடிகள் அதை முறியடித்துவிட்டனர்.

அவர்களது சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற உள்ளது. இந்த முத்தத் திருவிழாவுக்கு ஹங்கேரி பத்திரிகையான போர்ஸ் ஏற்பாடு செய்திருந்தது. போர்ஸ் என்றால் மிளகு என்று அர்த்தமாம்.

எல்லாம் சரிதான்... இனி, இந்த சாதனையை முறியடிக்க எத்தனை பேர் கலக்கப் போகிறார்களோ...?

பிளாஸ்டிக் வீடு!

மண் வீடு, கூரை வீடு, கல் வீடு, கருங்கல் வீடுதான் நாம் அறிந்தது. பிளாஸ்டிக்கால் வீடு கட்ட முடியுமா? முடியும் என்கிறார் ஒருவர்...

செர்பியா நாட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கணித பேராசிரியர் ஒருவர், முழுவதும் பிளாஸ்டிக் பாட்டில் களைக் கொண்டே தனது வீட்டைக் கட்டி அதில் குடியேறி உள்ளார்.

அவர் பெயர் டோமிஸ்லவ்ரா டோவனோ விக். இவர் கிராஜுஜெவாக் நகரில் 60 சதுர மீட்டர் பரப்பளவில் வீடு கட்டியுள்ளார். அந்த வீட்டின் அடித்தளத்தை மட்டுமே கான்க்ரீட்டால் அமைத்துள்ளார். மற்ற பகுதிகளை எல்லாம் பிளாஸ்டிக் பாட்டில்களால் கட்டியுள்ளார். சமையலறை, மேஜைகள், ஜன்னல்கள் ஆகியவையும் பாட்டில்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 13,500 பாட்டில்களைப் பயன்படுத்தி யுள்ளார். இந்த வீட்டைக் கட்டி முடிக்க இவருக்கு 5 ஆண்டுகள் ஆகியதாம். பாட்டில்களைச் சேகரித்துக் கொடுப்பதில் அவரது முன்னாள் மாணவர்களும் உதவி செய்துள்ளனர்.

தனது பிளாஸ்டிக் பாட்டில் வீடு, கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிக்கும் என்று டோமிஸ்லவ் ராடோவனோவிக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெரிய 'கல்'

அமெரிக்காவின் அக்மி செங்கல் நிறுவனம் செயல் படத் தொடங்கி 116 ஆண்டுகள் முடிந்துவிட்டன. 117-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இதைக் கொண்டாடும் விதமாக 117 அங்குல நீளத்தில் மிகப்பெரிய செங்கல்லைத் தயாரித்துள்ளது அக்மி நிறுவனம். இது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

அநேகமாக உலகின் மிகப்பெரிய செங்கல் என்ற பெருமை இதற்குக் கிடைக்க வாய்ப்புள்ளது. இப்போது கின்னஸ் சாதனைக்காக விண்ணப்பித்துள்ளது 'அக்மி' நிறுவனம்.

சிறிய...

சீன நாட்டிடம் ஆங்காங் ஒப்படைக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றன. இதையொட்டி ஆங்காங்கில் சிறிய இசைக்கருவி ஒன்றை இடைவிடாமல் இசைத்து கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சி நடந்தது. இதில் சீனா, ஆங்காங், தைவான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

பொடிசின் சாதனை!

சென்னை, சேத்துப்பட்டு எம்.சி.சி. மெட்ரிக் பள்ளியில் 3-ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் பிரசாந்த் கின்னஸ் சாதனைக்காக தரையில் பின்னோக்கி வேகமாக கரணம் அடித்தான். இந்தப் பொடுசு, 3 நிமிடங்களில் 50 தடவை அபாரமாக கரணம அடித்தான.

உடை குறைப்பில்...

கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறுவதற்காக ஆஸ்திரேலியாவின் சிட்னி நகர கடற்கரையில் ஆயிரத்து பத்து பெண்கள் நீச்சல் உடையில் நின்று சாதனை படைத்துள்ளனர்.

வரிசையாக...

கர்நாடக மாநிலம், பெல்காமைச் சேர்ந்த சிறுவன் அனிகெட் சிந்தக்குக்கு கால்களில் சக்கரங்களைக் கட்டி ஸ்கேட்டிங் செல்ல வேண்டும் என்று ஆசை. ஸ்கேட்டிங் கற்றுக்கொண்ட அனிகெட் சிந்தக்குக்கு, ரப்பர் போல வளையும் உடல்.

பல சாகசங்களைச் செய்யத் துவங்கினான். மிகச் சிறிய இடைவெளியிலும் புகுந்து வெளியில் வந்தான். ஒரு முறை காருக்கு அடியிலும் ஸ்கேட்டிங் சென்றபோது, இதில் சாதனை புரிய வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது.

இவனது தந்தை ரமேஷ் தொழிலதிபர். தனது விருப்பத்தை பெற்றோரிடமும், பயிற்சியாளரிடமும் கூறினான்.

வரிசையாக காரை நிறுத்தினர். ஒன்று, இரண்டல்ல. மொத்தம் 57 மோட்டார் வாகனங்கள், வேன்கள் என விதவிதமான கார்கள் வரிசையாக அணிவகுத்து நின்றன.

ஸ்கேட்டிங் வந்த சிறுவன், கார்களுக்கு அருகில் வந்ததும், கை கால்களால், கால் முனையைப் பிடித்து முகத்தை தரையருகே கொண்டு வந்தான்.

மின்னல் வேகத்தில் 57 கார்களையும் கடந்து வெளியே வந்தான். இதற்கு அவன் எடுத்துக்கொண்ட நேரம் வெறும் 40 விநாடிகள்தான்.

மிகவும் ஆபத்தான இந்த சாதனையை மிக எளிதாக செய்து முடித்தான் அனிகெட். இன்னும் அவனுக்கு ஆசை தீரவில்லை. 100 கார்களையாவது இப்படி கடக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் கார்கள் கிடைக்காமல் அவனது பயிற்சியாளர்கள் தவிக்கின்றனர்.

கேரள ஓட்டலில்...

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு உலகின் மிகப்பெரிய கேக்கைத் தயாரித்து உள்ளதாக கேரள ஓட்டல் ஒன்று அறிவித்துள்ளது.

கோவளத்தில் உள்ள 'உதய் சமுத்ர' ஓட்டல்தான் இச்சாதனை படைத்துள்ளது. இங்கு தயாரான கிறிஸ்துமஸ் கேக் 29.1 அடி உயரம் கொண்டதாக இருக்கிறது.

இதன் எடை 2,500 கிலோ. சிறு துண்டுகளாக வெட்டினால் 22,000 பேர் ஆளுக்கு ஒரு துண்டு கேக் சாப்பிடலாம்.

"உலகின் மிகப் பெரிய கேக் தயாரித்து உள்ளோம். பாங்காக்கிலுள்ள மெர்குரி ஓட்டல் 27.6 அடி உயரத்தில் கேக் தயாரித்ததுதான் இதுவரை சாதனையாக இருந்தது" என ஓட்டலின் இயக்குநர் ராஜகோபால் அய்யர் தெரிவித்தார்.

இந்தக் கேக் தயாரிக்க 200 கிலோ மாவு, 120 கிலோ சர்க்கரை, 1500 கிலோ முட்டை, 10 பாட்டில் ரம், 10 பாட்டில் பிராந்தி, 70 கிலோ பழம், 50 கிலோ வெண்ணெய் - சர்க்கரை கலவை, 100 கிலோ வெண்ணெய், 69 கிலோ பழ வகைகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டு உள்ளதாம்.

அணிய முடியா காலணி!

சேலம் செவ்வாய்ப்பேட்டையைச் சேர்ந்தவர் மணிவண்ணன். இவருக்கு வயது 35. காலணி தொழிலாளி. பிரபாத் பஸ் ஸ்டாப் அருகே தெருவோரம் கடை போட்டுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் ஒன்றரை 'இஞ்ச்' அளவில் செருப்பு தயாரித்து கின்னஸ் சாதனை படைத்ததாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியைப் படித்துள்ளார்.

15 ஆண்டுகளாக காலணித் தொழிலில் ஈடுபட்டுள்ள தானும் இதுபோல் சாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் உதயமானது.

இதையடுத்து ஒரு 'இஞ்ச்' அளவுக்கு காலணி தயாரித்து அமெரிக்காவைச் சேர்ந்தவரின் கின்னஸ் சாதனையை முறியடிக்கத் திட்டமிட்டார்.

அதன்படியே ஒரு 'இஞ்ச்' காலணி தயாரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.

ஒரு 'இஞ்ச்' அளவுக்கு காலணி தயாரித்த மணி வண்ணன், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்தார்.

இதை சாதனையாக பதிவு செய்ய ஆட்சியரிடம் உதவி செய்யுமாறு மனு கொடுத்துள்ளார்.

'டிஸ்யூம்' கதாநாயகன்!

'டிஸ்யூம்' படத்தில் நடித்த குள்ள நடிகர் பக்ரு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

பக்ருவின் இயற்பெயர் அஜய்குமார். வினயன் இயக்கத்தில் 'அற்புதத் தீவு' படத்தில் இவர் நடித்தார். தமிழ், மலையாள மொழிகளில் இப்படம் தயாரானது.

இப்படத்தில் பிரத்விராஜ், மல்லிகா கபூர் நடித்திருந்தனர். இன்னொரு கதாநாயகனாக பக்ரு நடித்தார்.

கமர்ஷியல் படத்தில் குள்ள நடிகர் ஒருவர் ஹீரோவாக நடிப்பது இதுவே முதன் முறை. இந்த பெருமைக்காக அவர் கின்னஸில் இடம் பிடித்துள்ளார்.

ரோபோ தாத்தா!

போர்ச்சுக்கல் நாட்டின் டோரெஸ் வேட்ராஸ் நகரில் 11 மீட்டர் உயர ரோபோ வடிவ கிறிஸ்துமஸ் தாத்தா பொம்மை வைக்கப்பட்டு இருந்தது.

பொம்மலாட்ட பொம்மையைப் போல் இதை இயக்க முடியும். கின்னஸ் சாதனைக்காக இந்த கிறிஸ்துமஸ் தாத்தாவைத் தயாரித்து இருந்தனர்.

ஒருவர் மூன்று சைக்கிளில்!

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு தனியார் அமைப்புகள் சார்பில் கோவில்பட்டி செண்பக

வல்லியம்மன் கோவில் முன்பு விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது, கடையநல்லூர் அருகே உள்ள புதுக் குடியைச் சேர்ந்த இராணுவ வீரர் 26 வயது கொண்ட மணிகண்டன் என்பவரால், கோவில்பட்டியில் இருந்து சங்கரன்கோவில் வரை மூன்று சைக்கிள்களில் பயணம் செய்யும் சாதனை நிகழ்ச்சி நடந்தது.

மேற்கு மற்றும் கிழக்கு போலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர்கள் முருகேசன், சண்முகம் ஆகியோர் பயணத்தைத் தொடங்கி வைத்தனர்.

கோயில்பட்டியிலிருந்து நாலாட்டின்புத்தூர், வான முட்டி, கழுகுமலை வழியாக சங்கரன்கோயிலில் உள்ள ஏ.வி. மேல்நிலைப் பள்ளியில் மணிகண்டன் தனது சாதனைப் பயணத்தை நிறைவு செய்தார்.

இதுகுறித்து சாதனையாளர் கூறியது:

"இராணுவத்தில் சேர்ந்து ஆறு ஆண்டாகிறது. கடந்த 2005-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இதே போல மூன்று சைக்கிள்களில் கடையநல்லூரிலிருந்து நெல்லை வரை 4 மணி 40 நிமிடத்தில் கடந்து, லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றேன்.

கின்னஸில் இடம் பெறுவதற்காக கோயில்பட்டியில் இருந்து சங்கரன்கோயில் வரை 40 கிலோ மீட்டர் தூரத்தை 2.30 மணி நேரத்தில் கடந்துள்ளேன். இது ஒரு கின்னஸ் சாதனையாகும்" என்கிறார்.

பிறந்த குழந்தையின் சாதனை

இரஷ்யாவின் அல்டாய் பகுதியைச் சேர்ந்தவர் தத்யானா பாராபனோவா. வயது 43.

இவருக்கு 8 பெண் குழந்தைகள் மற்றும் 3 ஆண் குழந்தைகள் உள்ளது. இந்நிலையில் தத்யானா மீண்டும் கர்ப்பமானார்.

அவருக்கு நடந்த 2007-ஆம் ஆண்டு அறுவை சிகிச்சையில் பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை

7.75 கிலோ எடை இருந்ததுதான் அதிசயம். இது குறித்து தாய் கூறியது...

''கர்ப்ப காலத்தில் சிறப்பு உணவுகளைச் சாப்பிடும் அளவிற்கு எங்களிடம் பொருளாதாரம் இல்லை. இதனால் வீட்டில் கிடைத்த உருளைக்கிழங்கு, நூடுல்ஸ், தக்காளி இவற்றையே விதவிதமாக சமைத்துச் சாப்பிட்டேன்.

எங்கள் குழந்தைக்கு நாடியா என்று பெயரிட்டு உள்ளோம். அவளுடைய எடையைப் பார்த்து அவளது தந்தையே அதிர்ச்சி அடைந்தார். ஆனால் எதுவுமே சொல்லவில்லை. நாடியாவின் அக்காள்களும், சகோதரர் களும்கூட பிறக்கும்போது 5 கிலோவுக்கு அதிகமாகத்தான் இருந்தனர்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

இத்தாலியில் கடந்த 1995-ஆம் ஆண்டு ஒரு பெண்ணிற்கு 10.2 கிலோ எடையில் ஆண் குழந்தை பிறந்தது.

இக்குழந்தைதான் அதிக எடையுடன் பிறந்தது என்ற பெருமையுடன் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இதற்கு முன்பாக 1879-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஒரு பெண்ணிற்கு 10.8 கிலோவுடன் ஒரு பெண்ணிற்கு 10.8 கிலோவுடன் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் அது பிறந்த சில மணி நேரங்களிலேயே இறந்துவிட்டது.

சாதாரணமாக குழந்தைகள் பிறக்கும்போது சராசரி யாக 3.2 கிலோ எடையுடன் இருக்கும்.

நிறைந்தது

தஞ்சை மாவட்டம் பாபநாசத்தைச் சேர்ந்த
த.வெ.கண்ணன் எனும் இயற்பெயர் கொண்ட இவர்,
குறளின் மேல் கொண்ட காதலால் குறள்பித்தன்
ஆனார். புகழ்பெற்ற தஞ்சாவூர் கரந்தை தமிழ்ச்
சங்கத்தில் புலவர் பட்டம் பெற்றிருக்கிறார்.

1965 ல் எழுதத் தொடங்கிய இவர், தமிழ் இதழியலில்
குறிப்பிடத்தக்க இடம் வகித்த 'தாய்' வார இதழில்
பத்தாண்டுகள் துணையாசிரியராகப் பணியாற்றியவர்.

தமிழக அரசு விருதினையும், திருப்பூர் தமிழ்ச் சங்கம்,
காஞ்சி தமிழ் வளர்ச்சி மன்றம், வி.ஜி.பி, மனிதநேய
அறக்கட்டளை, மதுராந்தகம் மகாகவி பாரதி
என பல்வேறு அமைப்புகளின் விருதுகளையும்
தன் எழுத்துப் பணிக்காக வென்று குவித்தவர்.

'இரவும் பகலும் தாய்த் தமிழுக்குப் பணியாற்றுவதே
என் பிறவிப் பெரும் பயன்' என்ற நோக்கில் எழுதிக்
கொண்டே இருக்கும் இவருடைய நூல்களின்
எண்ணிக்கை எழுபத்தைந்தைத் தாண்டி
நடைபோடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.